# அரங்கம்
செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, செப்டம்பர் 28, 2018. இதழ் - 32



விளம்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com




**'வரி அறவீடு திருப்தியில்லை'**

மாநகரசபையின் வரி அறவீட்டு மாதத்துக்கு பொதுமக்களின் தரப்பில் பங்களிப்பு....

பக்கம் - 09



**அந்த நாள் மீளாதோ?**

'கூடியிருந்து கிணறு வெட்டிய, ஓலை கட்டிய காலமெல்லாம் கடந்து போச்சு இதனால் உறவுகள் ஒன்று சேர்ந்து....


பக்கம் - 06



**ஸ்ரீறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் நடந்தது ''நாடு கடத்தலே''**

'இந்தியப் பிரச்சினையானது கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று கையாண்டு....

பக்கம் - 13



**'முகப்பு அலுவலகம் - மக்கள் குறை நீக்கும்!'**

புதன்கிழமை அரச நிறுவனங்களை பொறுத்தவரை பொதுமக்களுக்கான தினம். அந்த தினத்தை முடிந்தவரை.....

பக்கம் - 09



# தீக்குளிப்போம் என்றதும் பொத்துவிலுக்கு விரைந்த அம்பாறை அரசஅதிபர்

**மக்களை அழைத்து பொத்துவில் பிரதேச செயலகத்தில் பேச்சுவார்த்தை!**

'இந்த வாரத்துக்குள் அரசஅதிபர் வராவிடின் நாம் தீக்குளிப்போம்' என்று கூறிய பொத்துவில் போராட்டமக்களின் குரலுக்கு செவிசாய்த்து, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்க நேற்று(27) வியாழக்கிழமை பொத்துவிலுக்குச்சென்று கனகர் கிராம மக்களைச் சந்தித்தார்.

பொத்துவில்லில் தமது வாழ்விடத்தை தமக்கு மீளத் தரக் கோரி நேற்று (27) வியாழக்கிழமை 45வது நாளாக அந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை போராட்டக்காரர்களைச் சந்தித்த தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர்நாயகம் வி.ஆனந்த சங்கரியிடம் 'இந்த வாரத்துள் அரசஅதிபர் வராவிடின் நாம் தீக்குளிப்போம்' என்ற சபதத்தைத் தெரிவித்திருந்தமையும் மறுநாள் ஊடகங்களில் செய்திகள் பரவலாக வெளிவந்திருந்தமையும் தெரிந்ததே.

இந்தச்செய்தி வெளியாகி 04 நாட்களுள் அரச அதிபர் பண்டாரநாயக்க நேற்றுக்காலை பொத்துவில் 60ஆம் கட்டை கனகர்கிராம மக்களைச் சந்தித்தார். இதற்கான தீர்வைத், தான் பெற்றுத்தருவதாகவும் அதுவரை போராட்டத்தை முடித்துவிட்டு வீடு திரும்புமாறும் அரச அதிபர் மக்களைக் கேட்டார்.

மக்கள் மசியவில்லை. தீர்வு வரும்வரை நாம் இந்த இடத்திலேயே இருப்போம் என்று கூறி மறுத்துவிட்டனர்.

அதன் பின்னர் போராட்டகாரர்களில் சிலரை அழைத்து பொத்துவில் பிரதேச செயலகத்தில் நீண்ட கலந்துரையாடலொன்றை நடாத்தினார். மக்களும் தம்பக்கம் உள்ள நியாயத்தைச் சொன்னார்கள்.

இறுதியில் அரச அதிபர் 'எதிர்வரும் 16ஆம் திகதிக்கிடையில் தங்களது சகல விபரங்களையும் பொத்துவில் பிரதேச செயலாளரிடம் ஒப்படையுங்கள். நான் 16ஆம் திகதி வந்து பிரச்சினையை ஆராய்ந்து தீர்த்துவைக்கிறேன். ஆகவே இன்றிலிருந்து போராட்டத்தை முடியுங்கள்' என்றார்.

பதிலுக்கு தேவையான ஆவணங்கள் நிறைய கொடுத்திருக்கிறோம். சரி உங்களுக்கும் தருகின்றோம். ஆனால் வீடுகாணி ஒப்படைக்கும்வரை அந்த இடத்தைவிட்டு அசையமாட்டோம் என்று அறுதியாக மக்கள் கூறிவிட்டனர். அதன்படி போராட்டம் தொடர்கிறது.

-- காரைதீவு நிருபர்
வி.ரி.சகாதேவராஜா--

# அப்பத்தின் விலையும் அதிகரிப்பு

சமயல் வாயு விலையேற்றத்தை அடுத்து அப்பத்துக்கான விலையை 15 ரூபாவாக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை உணவு விடுதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

மாதாந்தம் மேலதிகமாக 6000 ரூபாவுக்கும் அதிகமாக சமையல் வாயுவுக்காக தாம் செலவிடுவதாகவும் அந்தச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த செலவினத்தை தாங்க முடியாத காரணத்தினாலேயே தாம் அப்பத்துக்கு விலையேற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு ஊடகங்களுக்கு கூறியுள்ளது.

12.5 கிலோகிராம் வாயுக் கொள்கலனின் விலை 195 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.



வாயு நிறுவனங்கள் கேட்டதற்கிணங்க, வாடிக்கையாளர் விவகார நிர்வாக

தொடர்ச்சி... (பக்கம் -15 )




# மட்டக்களப்பு மாநகர சபையின் 03 வது பௌர்ணமி கலை விழா



மட்டக்களப்பு மாவட்ட செயலகமும், மாநகர சபையும் இணைந்து நடாத்திவரும் மட்டக்களப்பின் பாரம்பரிய கலை கலாச்சாரங்களை வெளிப்படுத்தும் ஆற்றுகைக் கலை நிகழ்வான பௌர்ணமி கலை நிகழ்வானது திங்கட்கிழமை மாநகரசபை உறுப்பினரும், கலை கலாச்சாரக் குழுவின் தலைவருமான வே. தவராஜா தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், மாநகரசபை முதல்வர் தி.சரவணபவான், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்கள், மாவட்ட செயலக அதிகாரிகள், மாநகரசபை உத்தியோகத்தர்கள், தமிழ்ச் சங்கப் பிரதிநிதிகள், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# உணவக விடுதியில் பாலியல் வல்லுறவு




தென் ஆப்ரிக்காவில் உணவக விடுதியில் 17 வயது பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார் என்று எழுந்த குற்றச்சாட்டு அந்நாட்டு மக்களை கடும் கோபத்திற்கு உள்ளாக்கி உள்ளது.

இருபது வயது இளைஞர் கழிப்பறைக்கு சென்று கொண்டிருந்த அந்தப் பெண்ணை பின்தொடர்ந்து பலவந்தமாக இழுத்து, ஆண்கள் பகுதிக்கு அழைத்து சென்று பாலியல் வல்லுறவு செய்தார் என்று கூறப்படுவதாக காவல் துறை தெரிவிக்கிறது.

சம்பவ இடத்திலேயே அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து போதை பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. தென் ஆப்ரிக்க அமைப்பொன்று அந்நாட்டில் ஒரு நாளுக்கு 110 பாலியல் வல்லுறவு சம்பவம் நடப்பதாக கூறுகிறது.

# றாகம விபத்தில் இருவர் பலி

கொழும்பு றாகம புகையிரத நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

வியாழக்கிழமை காலை 07.55 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கண்டியில் இருந்து மாத்தறை நோக்கி சென்ற புகையிரதத்துடன் மோதியதிலேயே இவர்கள் பலியாகினர்.

புகையிரத பாதையின் குறுக்காக கடந்த சென்ற போதே குறித்த நால்வரும் புகையிரதத்துடன் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


# காணி விற்பனைக்கு உண்டு

திருப்பெருந்துறை கண்ணகி அம்மன் கோவில் பிரதான வீதியில் காணி விற்பனைக்குண்டு. 36பேச் காணியை மொத்தமாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் பின் காணும் தொலைபேசி இலக்கத்துடன்

தொடர்பு கொள்ளவும்.
0716165785





# கட்டிளமைப் பருவ உளநலம்

**அடிப்படை உதவிசெய்யும் திறன்கள்**

விசேட விதமான பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ முறைகளை கையாள்வதற்கு முன்னதாக, நாங்கள் அடிப்படை உதவியளிக்கும் முறைகள் பற்றி கலந்துரையாட வேண்டும். இது உதவி நாடிவரும் பயனாளியுடனான நல்லுறவை கட்டியெழுப்புவதுடன் தொடர்புள்ளது. உளவியல் ரீதியாக உதவியளிக்கும் போது பயனாளியுடன் சுமுகமான, நம்பிக்கையான, மதிப்பளிப்புடனான உறவுமுறை இன்றியமையாதது. இந்த அடிப்படை உதவியளிக்கும் விடயங்கள் பிரச்சனைகளிற்கான, முகாமைத்துவத்தில் மிகப்பயனுடையது.

**பயனாளிக்கு மதிப்பளித்தல்**

பயனாளிக்கு உதவி செய்வதற்கு உங்களிற்கு உள்ளார்ந்தமான நேர்மை தேவைப்படுகின்றது. பயனாளி மனம் திறந்து தனது புதிய பிரச்சினைகளை கதைக்கும் போது ஆர்வத்துடன் அவற்றை செவிமடுத்தல் வேண்டும். ஒரு பயனாளி தனது பிரச்சினையைப் பற்றி உங்களிடம் கதைக்கும்போது அவரை தன்மானத்துடன், கண்ணியத்துடன் நடாத்துவதற்கு இனம், நிறம், பால், வயது, மொழி, மதம், அரசியல் / கலாசாரக் குழுக்கள், சாதி, சமூக வகுப்புக்கள், ஏழை, பணக்காரன், பால்நிலை, பிறப்பு உட்பட ஏனைய நிலைகள் போன்ற எந்தவொரு பாகுபாடுகளும் காட்டப்படலாகாது. இந்த நற்பண்புகள் பயனாளியுடன் ஆரோக்கியமான



உறவை கட்டியெழுப்புவதற்கு உமக்கு அவசியமானவை. சரியான நல்லுறவு பயனாளியுடன் ஏற்படாதவிடத்து நீங்கள் வழங்கும் இடையீடுகள் பயனளிக்கப்போவதில்லை. அத்துடன் பயனாளியுடன் பணியாற்றுவதற்கு அவரிடத்தில் உள்ள கலாச்சார ரீதியான நம்பிக்கைகள் குறித்தும் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வாறாக கேள்வி கேட்கும் போது நீங்கள் அவற்றிற்கு பூரண மரியாதை கொடுத்து, ஆர்வத்துடன் செவிமடுப்பதோடு அவர்கள் குறிப்பிடுகின்ற நம்பிக்கைகளிற்கு இடையிலான வேறுபாட்டை நன்கு உணர்ந்து, அவர்கள் குறிப்பிடுகின்ற விடயங்கள் எவையெனவும் விடுபடாதவாறு அவதானிக்கவும்.

**அடிப்படை உதவி செய்யும் திறன்கள்**

உங்களது பயனாளியுடன் ஆரோக்கியமான உறவை காட்டி வளர்ப்பதற்கு பல நல்ல தகைமைகளும், உளவியல் திறமைகளும் தேவைப்படுவதோடு, இவற்றை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ச்சியான இடைவிடாத பயிற்சியும் தேவைப்படுகின்றது கடந்த காலத்தில் உங்களது நெருங்கிய உறவினர், நண்பர்கள் போன்றோர் உங்களுடன் கலந்துரையாடிய விடயங்களை குறித்து நன்றியுணர்வுடன் நினைத்துப் பாருங்கள். நீங்கள் அவ்வேளைகளில் இங்கு குறிப்பிடப்படுகின்ற பல்வேறு திறன்களை செவிமடுப்பதற்கு பிரயோகித்து இருப்பீர்கள். இந்த திறன்கள் யாவும் எம்மிடத்திலும் இருப்பதோடு, அவையாவும் பயனாளியின் பிரச்சினையை செவிமடுப்பதற்கும், உதவி செய்வதற்கும் தேவையானவை.

**இரகசியம் காத்தல்**

உங்களது பயனாளியுடன் வலுவான உறவை ஏற்படுத்த

நம்பிக்கையும், இரகசியம் காத்தலும் பிரதானமானவை. உங்களது பயனாளிக்கு, தான் வெளிப்படையாக கூறும் கதைகள் வெளிவராதபடி பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை தெரிந்திருக்க வேண்டும். குறிப்பாக பல்வேறுவிதமான மனவடுக்களோடு, உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் பயனாளிகளில் இரகசியம் காத்தல் உண்மையாகவும் நேர்மையாகவும் இடம்பெறவேண்டும். சிலவேளைகளில் இச்சம்பவங்கள் 'சமூகவடுக்களாக' கூட அமையலாம். (உதாரணமாக கற்பழிப்பால் பாதிக்கப்பட்ட பயனாளி) இருந்த போதும், உங்களது பயனாளி இரகசியம் காத்தல் என்ற செயல் தமது சட்டபூர்வ நடவடிக்கைகளில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கும் உதவும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பயனாளி ஒருவரது பாதுகாக்கப்பட வேண்டிய இரகசியங்களை நீங்கள் காவல்துறைக்கோ, சமூகசேவை அமைப்புகளிற்கோ தெரியப்படுத்தும் போது, சிலவேளைகளில் பயனாளி தனது உயிரை மாய்த்துக்கொள்ளவும், வேறு யாரையாவது நபரை பழிவாங்கும் நிலைக்கும் தள்ளப்படவும் முடியும். தொடர்ச்ச்சியான மேற்பார்வை என்பது இரகசியம் காத்தலிற்கான தடையாக அமையலாம். தொடர்ச்சியான சந்திப்புகள், மேற்பார்வையிடுதல் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றி பயனாளியுடன் கலந்துரையாடுவதோடு, உங்களது மேற்பார்வையாளருடன் உதவியளிக்கும் அணியுடன் இந்தச் சம்பவ முகாமைத்துவம் தொடர்பாக நீங்கள் என்ன விடயங்களை கலந்துரையாடுகின்றீர்கள்? அதன் முக்கியத்துவம் என்ன? என்பதைப் பற்றியும் பயனாளி தெரிந்திருக்க

**டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்**
**உளநல மருத்துவர்**
**வாழைச்சேனை மருத்துவமனை**

உதவி செய்யவும். இரகசியம் காத்தல் என்ற செயலில், பயனாளி தொடர்பாக தெரிவிக்கின்ற விடயங்கள் முக்கியமானவை.

**தொடர்பாடல்**

உங்களது பயனாளியுடன் மேற்கொள்ளும் தொடர்பாடல் முறைகள் முக்கியமானவை. பயனாளியின் உள்ளார்ந்த பிரச்சினைகள், உணர்ச்சி வெளிப்பாடுகள், சூழ்நிலைகள் என்பவற்றை சரியான முறையில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )



# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 20

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்**

அஸ்ரப் அவர்களின் இப்பத்தி எழுத்தாளர் சந்தித்துச் சம்பிரதாய பூர்வமான முகமன் கூறுதலையும் நலம் விசாரிப்புக்களையும் கடந்த பின் உரையாடல் அரசியலின் பக்கம் திரும்பியது.

இப்பத்தி எழுத்தாளர் " அம்பாறை மாவட்டத்தில் தற்போதுள்ள பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை ஆகிய தேர்தல் தொகுதியை உள்ளடக்கியும் அம்பாறைத் தேர்தல் தொகுதியைத் தவிர்த்தும் அமையவுள்ள உத்தேச முஸ்லிம் பெரும்பான்மைத் தென்கிழக்கு மாகாண ஆளுகையின் கீழ் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களும் கொண்டு வரப்படவேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முன் வைத்துள்ள யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே அடிப்படையில் உத்தேச தென்கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பெரும்பான்மைப் பிரதேசங்கள் ஏன் உத்தேச தென்கிழக்கு அலகு தவிர்ந்த மீதி வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் பெரும்பான்மை மாகாண ஆளுகையின் கொண்டு வரப்படவில்லை?"

என்று கேள்வி எழுப்பினார். அதற்கு "உத்தேச தென்கிழக்கு அலகில் தமிழர்களும் முஸ்லிம்களும் சேர்ந்து வாழலாம்தானே " என்றார் அஸ்ரப்.

"அப்படியானால் இணைந்த வடக்குகிழக்கிலும் தமிழர்களும் முஸ்லிம்களும் சேர்த்து வாழலாம்தானே" என்று பதில் அளித்த இப் பத்தி எழுத்தாளர் மேலும் "ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனது 13வது தேசிய மாநாட்டில் வெளியிட்ட மாநாட்டு மலரில் "காலஞ்சென்ற ஜி. ஜி பொன்னம்பலம் 74% சிங்களவர் மத்தியில் 18% தமிழர்கள்



எம்.எச்.எம்.அஸ்ரப்

சிறுபான்மை இருப்பதை விரும்பாது 50 க்கு 50 சமநிலைப் பிரதிநிதித்துவத்தைக் கோரியிருந்தார். அதே அடிப்படையில் 18% முஸ்லிம்களாகிய நாம் ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களினால் 70% தமிழர்களிடையே நிரந்தர சிறுபான்மையாகத் தள்ளப்படுவதை விரும்பவில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதே தர்க்க ரீதியாகத்தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனது யோசனையில் தெரிவித்துள்ள அம்பாறை மாவட்டத்தில் அமையும் உத்தேச முஸ்லிம் பெரும்பான்மை மாகாணத்தில் - தென்கிழக்கு அலகில் - 58% ஆக இருக்கபோகும் முஸ்லிம்களிடையே 27% ஆக இருக்கப்போகும் தமிழர்கள் நிரந்தர சிறுபான்மையாகத் தள்ளப்படுவதை விரும்பவில்லை" என்று விளக்கமளித்தார்.

இதனை மிகவும் கூர்மையாக காது கொடுத்துக் கேட்ட அஸ்ரப் தனது முகத்தைச் சற்றுக் கடுமையாக வைத்துக்கொண்டு, "தமிழர் விடுதலைக்கூட்டணி தென்கிழக்கு அலகை ஆதரித்துள்ளதே" என்றார். இப்பத்தி எழுத்தாளரும் சற்றுக் கடுமையான தொனியில், "தமிழர் விடுதலைக்கூட்டணியின் நிலைப்பாட்டை அம்பாறை மாட்டத்தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. உத்தேச தென்கிழக்கு அலகு உருவாக்கத்தின் சாதக பாதகங்களை அனுபவிக்க போகிற அம்பாறை மாவட்டத் தமிழர்களுடந்தான் முதலில் முஸ்லிம் காங்கிரஸ் பேசியிருக்க வேண்டும். அதனை விடுத்து தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் நீங்கள் செய்து கொண்டுள்ள உடன்படிக்கையை அம்பாறை மாவட்டத்தமிழர்களிடம் விற்பதற்கு வர வேண்டாம். வடகிழக்கு இணைப்பை பெற்று கொள்வதற்காகத் தமிழர்களுடைய யாழ் மேலாதிக்க அரசியல் தலைமை அம்பாறை மாவட்டத் தமிழர்களைப் பலி கொடுக்க அம்பாறை மாவட்டத் தமிழர்கள் இடம்கொடுக்கப் போவதில்லை" என்று கூறினேன்.

இப்பத்தி எழுத்தாளரின் பதிலால் சற்று இறுக்கத்தைத் தளர்த்திய அஸ்ரப் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குத் தான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். இப்பத்தி எழுத்தாளரும் தன்னை சுதாகரித்துக் கொண்டு, கல்முனைத்தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவைத் தரமுயர்த்த வேண்டும் என்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட தனியான தமிழ்ப் பெரும்பான்மை உள்ளூராட்சி அலகை (பிரதேச சபையை) ஏற்படுத்த வேண்டும் என்றும், அதேபோல் பொத்துவில் மற்றும் சம்மாந்துறைப் பிரதேசங்களில் முறையே கோமாரியை மையமாக் கொண்டும், முன்னைய மல்வத்தை கிராம சபையையும் அன்னமலை - நாவிதன்வெளி கிராமசபையையும் வீரமுனைக் கிராமத்தையும் உள்ளடக்கியதாகவும் தனியான புதிய தமிழ்ப்பெரும்பான்மை பிரதேச செயலக பிரிவுகளும், உள்ளூராட்சி அலகுகளும் ஏற்படுத்த வேண்டும் என்றும், ஆலையடிவேம்புப் பிரதேசசபையின் எல்லைப்பிரச்சனை தீர்த்து வைக்கப்படல் வேண்டும் என்றும், தற்போதைய (அப்போதிருந்த) கல்முனைக் கல்வி மாவட்டத்தில் அடங்கும் சகல தமிழ்ப் பாடசாலைகளையும் உள்ளடக்கிய தனியான கல்வி வலயம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்றும், இத்தனியான கல்வி வலயத்தின் அலுவலகம் கல்முனை அல்லது அக்கரைப்பற்று அல்லது திருக்கோவில் ஆகியவற்றிலுள்ள ஏதாவது ஒரு இடத்தில் அமைய வேண்டும் என்றும், அஸ்ரப் தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, இவற்றை விரைவில் ஏற்படுத்தி தர வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன் வைத்ததுடன், இவற்றை ஏற்படுத்தி தந்தால் மட்டுமே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன் வைத்துள்ள உத்தேச முஸ்லிம் பெரும்பான்மைத் தென்கிழக்கு அலகு யோசனையை ஆதரிப்பது குறித்துக் கருத்தில் எடுக்கலாம் என்றும் முடிவாகக் கூறினார்.

மிகவும் பொறுமையாகவும் நிதானமாகவும் கவனமாகவும் இக் கோரிக்கைகளைக் காதில் வாங்கிய அஸ்ரப், இப்பத்தி எழுத்தாளரிடம் இவை பற்றி தான் மேலும் பேச வேண்டுமாயின் யாரோடு பேச வேண்டும் என்று கேட்டார். இப்பத்தி எழுத்தாளர் "அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கத்தினருடன் பேசுங்கள்" என்று சட்டென்று பதில் அளித்தார்.
அதற்கு அஸ்ரப் தான் யோசித்துவிட்டுச் சந்திப்புக்குரிய காலத்தையும் இடத்தையும் அறியத்தருவதாகவும் அதன் பின்னர் தான் அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கத்தினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி இப்பத்தி எழுத்தாளரையே கேட்டும் கொண்டார். இப்பத்தி எழுத்தாளரும் அதற்கு சம்மதித்தார்.

சுமார் இரண்டு மணி நேரம் நீடித்த இந்த உரையாடலை முடித்துக்கொண்டு அஸ்ரப் அவர்களின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திலிருந்து திருப்தியோடு இப்பத்தி எழுத்தாளர் வெளியேறினார். அப்போது முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் செயலாளராக இருந்த சகோதரர் ஹசன் அலி அவர்கள் இவ்வுரையாடல் முழுவதிலும் கலந்து கொள்ளாவிட்டாலும் இடையில் சில நிமிடங்கள் வந்து சென்றதால் இவ்வுரையாடல் நிகழ்வு குறித்து அவருக்கும் தெரியும். ஆனால் பின்னர் நடந்த நிகழ்வுகள் யாவும் துரதிர்ஸ்டமானவையே...


(தொடரும்.... )

# சீதையின் சீத்துவம் – தொடர்ச்சி 2




சீதையின் விருப்பமில்லாமல் இராவணன் அவளை வலியத் தூக்கிச் சென்றான் என்பார்கள். இதையொட்டி இராமாயணத்திலே வரக்கூடிய கருத்துக்களைக் கூர்ந்து நோக்கின் இக் கருத்து தவறுடையதாகக் காணப்படும்.

"விருப்பமில்லாத எந்த பெண்ணையாவது தொட்டு வற்புறுத்தினால் உன் தலை வெடித்து விடும் " என்று சிவனார் விட்ட சாபமொன்று இராவணன் பால் உள்ளது. சீதை விரும்பாமல் இராவணன் வலிந்து செய்திருப்பானாகின் அவன் தலையானது சிவனார் சாபப்படி வெடித்திருக்க வேண்டும். அவன் தலை அவ்வாறு வெடிக்காத காரணத்தால் இராவணன் சீதையை வலியத் தூக்கிச் சென்றான் என்ற கூற்று ஏற்புடையாத



காது. இது தொடர்பான இன்னும் சில கருத்துக்களை நோக்கினால் சீதையே இராவணனை விரும்பிச் சென்றிருப்பாளோ என்று நாம் எண்ண வேண்டியுள்ளது, இராவணனோ ஒப்புயர்வற்ற அறிஞன். கற்போர் பாரட்டும்படியான கலைஞன்; தன்னிகரற்ற வீரன்; மேலும் அழகிகளும் இராவணன் அழகைக் கண்டு விரும்பி அவர்களே அவனை நாடி வந்துள்ளனர் என்று வால்மீகியார் தனது காவியத்தில் கூறுகின்றார். இராவணனுடைய பேரழகைக் கண்டு இராமனே போர்க்களத்தில் வியந்து நின்றான். விபீடணன் இராமனுக்கு இராவணனைக் காட்டுகிறான். இலங்கை வேந்தனைக் கண்ட இராகவன் "வீபிஷணா, என்ன காந்தி! அரக்கர் தலைவனான இராவணன் மகா புகழுடையவன் போலத் தெரிகிறது. இராவணனுடைய பேரழகைக் கண்டு இராமனே போர்க்களத்தில் வியந்து நின்றான். நடுப்பகற் சூரியனைப்பார்ப்பது எப்படி அசாத்தியமோ, அப்படி இவனை பார்க்க கண் கூசுகிறதே! இவன் தேகம் தேஜஸால் சூழப்பட்டிருப்பது எனக்கு ஒன்றாகத் தெரிகிறது. தேவர்களுக்குக்கூட இப்படிப்பட்ட காந்தி கிடையாதே ! இவன் மட்டும் என் மனைவியை கவர்ந்து செல்லாமல் இருந்திருப்பின் இவனை நான் புகழ்வேன் தெரியுமா? " என்று அவன் அழகை வியந்து கூறினான். (வால்மீகி இராமாயணம் யுத்தகாண்டம் சுருக்கம் 58)

ஆடவர்க்கு ஆடவரே விரும்பும் அழகுடைய இராவணனை சீதை கண்டபோது எவ்வாறு தன் உள்ளத்தைப் பறிகொடுக்காமல் இருந்திருக்க முடியும் ? இது உண்மையிலயே சிந்திக்க வேண்டிய விசயந்தான். மேலும் சீதையின் உள்ளம் இராவணனை அடியோடு வெறுத்தொதுக்கி விட்டதாகவும் தெரியவில்லை.

அனுமன் இலங்கைப்போரை முடித்த பின்னர் சீதையை நோக்கி "சீதையே நீ சுகமாய் அயோத்திக்கு திரும்பலாம். நீ பட்ட துன்பம் எல்லாம் இத்தோடு அழிந்தது இராவணன் செய்யத் தகாத குற்றங்கள் செய்ததால் அழிந்தான் " என்று கூறுகிறான். இச் செய்தியைக் கேட்டு மகிழவேண்டிய சீதை தன் மகிழ்ச்சியைக் காட்டாது பெரிதும் இதற்காக வருத்தம் கொண்டவள் போல மௌனம் சாதித்து, அனுமனை நோக்கி இப்படிக்கூறுகிறாள் " இராமன் அழித்த இராவணன் மட்டும் குற்றவாளியல்ல; அவனை அழித்து விட்டதைக் கொண்டு பெருமகிழ்ச்சி கொள்வதில் பயனில்லை குற்றவாளிகளான இராமன், சீதை, அனுமன் ஆகியோரும் அழிந்தால்தான் முழுநீதியும் முற்றுப் பெறும் ; குற்றவாளிகளான அனைவரும் தண்டிக்கப்பட்டார்கள் என்ற நியாயமும் முடிவு பெறும்" என்று கூறுகிறாள். உண்மையாகவே இராவணனது அழிவை சீதை மனப்பூர்வமாக விரும்பியிருப்பாளேயானால் இராமனது

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மட்டக்களப்புத் தமிழ்ச் சமூகம் : அறியப்பட்டனவும் அறியப்படாதனவும் - 2

இந்த வரலாற்று வளர்ச்சியின் காரணமாக மட்டக்களப்பு தேசத்தில் நெற்பயிர்ச்செய்கை, நிலையான குடியிருப்புக்கள் என்பன தோன்றியதுடன், அதன் காரணமாக அரசுருவாக்கத்திற்கு ஏதுவான சமூகக்கட்டமைப்பு ஒன்றும் உருவாகிவிட்டது என்பதுவும் தற்போது தொல்லியலாய்வுகள் மூலம் தெளிவாகியுள்ளது. கிறிஸ்துவுக்கு முன் மட்டக்களப்பு தேசத்தில் வேள் எனும் சிறப்புப் பட்டத்தைப் பெற்ற நாகர் சிற்றரசுகள் தோன்றி விட்டது என்பதுவும் பெருமளவில் உறுதியாகிவிட்டது.

இந்த வளர்ச்சியினால் தோற்றம் பெற்ற குடும்பிமலை, கல்லடிச் சேனை, பாலமடு, இலவாணை வேரம், வெல்லாவெளி, கிரான், நெடிய மடு, வந்தாறுமூலை, குசாலன் மலை, மட்டக்களப்பு - நாவற்குடா, கறுவாஞ்சிக்குடி, சங்கமன்கண்டி, வாகரை, தாந்தாமலை எனப் பதினைந்து வேள் எனும் பட்டத்தைக் கொண்ட நாகரின் ஆட்சியின் கீழமைந்த வேள்புலங்கள் இனங்காணப்பட்டுமுள்ளன. இதில் கிரானைத் தவிர்த்தும் வட்டிபோட்டமடு, முறுத்தானை என்பவற்றைப் புதிதாக இணைத்துக் கொள்ள வேண்டும். மேலும் சில வேள்புலங்களை தெளிவாக இனங்காணப்படாமலும் உள்ளன.

இந்தத் தகவல்கள் மட்டக்களப்புத் தேசத்தில், இலங்கையைப் போன்று வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்து வருகின்றமையை உறுதிப்படுத்துகின்றன. தெளிவாக அறியப்பட்டுள்ள வகையில் இலங்கையில் நுண்கருவிகளின் பயன்பாடு கிறிஸ்துக்கு முன் 29000 ஆண்டுகளுக்கு முற்பட்டகாலத்தில் ஏற்பட்டதாகும். இக்கருத்து சிரான் தெரணியகல என்பவரின் ஆய்வின் முடிபு. இக்காலம் இற்றைக்கு 31000 வருடங்களுக்கு முற்பட்டதாகும். எனவே அதற்கு முன்பிருந்தே இலங்கையிலும் மட்டக்களப்பு தேசத்திலும் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள் எனலாம்.



இந்தத் தகவல்கள் மூலம், மட்டக்களப்புத் தேசத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலம், குறுணிக்கற்காலம், பெருங்கற்காலம் பற்றிய வரலாற்று வளர்ச்சிக்கட்டங்கள் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. மறுபுறமாக மட்டக்களப்புத் தேசத்தின் நாடோடி வேட்டைக் காலம், நாடோடி மந்தைக் காலம், நிலையான பயிர்ச்செய்கைக் காலம் என்ற சமூக வளர்ச்சிக்கட்டங்கள் பற்றி அறிந்து கொள்ளவும் முடிகிறது. இந்த சமூக வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் சிற்றரசுகள் தோற்றம் பெற்றதனையும் அறிந்து கொள்ள முடிகிறது.

மட்டக்களப்புத் தேசத்தில் வாழ்ந்த மக்களின் தொடர்ச்சியான வரலாற்று வளர்ச்சியை இப்போது, இவ்வாறு புரிந்து கொள்ள முடிகிறபோது, அறியப்படாத விடயங்கள் அதிகரித்துச் செல்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலாவது விடயம், இலங்கை வரலாற்று நூல்களில் குறிப்பிட்டுள்ள எல்லாளன் மற்றும் துட்டகாமினி காலத்தில் கிழக்கிலங்கையின் மேற்கில் வாழ்ந்த 32 தமிழ் சிற்றரசர்களை, இந்த வரலாற்று வளர்ச்சிக் கட்டத்தில் எங்கனம் பொருத்திப் பார்ப்பது என்பதாகும். இவற்றை விட துட்டகாமினி இணைத்துக் கொண்ட பலம்மிக்க பத்துத் துணைவர்கள், வத்த காமினியின் பின் ஆட்சி செய்த ஐந்து தமிழ் அரசர்கள் என்போரையும் இந்த வரலாற்றில் எவ்வாறு இணைத்துக் கொள்வது என்பதுவும் அறியப்பட வேண்டிய விடயங்களாகும். இந்நூல்கள் குறிப்பிடும் தகவல்களை மட்டக்களப்புத் தேசத்தில் வாழ்ந்த இயக்கர், நாகர் பற்றிய தகவல்களுடன் பொருத்திப் பார்க்க வேண்டிய தேவையுள்ளது.

இரண்டாவது விடயம், மட்டக்களப்பின் தொன்மையான ஊர்களினதும் தொன்மையான கோயில்களினதும் தோற்றத்துடன் தொடர்புடைய ‘வேடர்கள்’ யார் என்பதும் அவர்களை மட்டக்களப்புத் தேசத்தின் வரலாற்று வளர்ச்சிக் கட்டத்துடன் எங்கனம் பொருத்திப் பார்ப்பது என்பதாகும். இவ்விடயம் பற்றிய ஆய்வு மட்டக்களப்பு சமூகங்கள் பற்றிய தெளிவான தகவல்களை தரவல்லன என்றே கருத முடிகிறது.

மூன்றாவது விடயம், மட்டக்களப்பின் பூர்வீக குடிகளின் வழிபாடான குமாரர் வழிபாடு எச்சமூகத்தினருக்குரியது, எக்காலத்திற்குரியது என்பது. குமாரர் வழிபாட்டில் காணப்படுகிற வேடர் கலை, இராஜ கலை என்பன இருவேறுபட்ட பழங்குடிகளினது பண்பாட்டைக் காட்டுகின்றன. இவை இரண்டினையும் ஆராய்ந்தறிய வேண்டியுள்ளது.

இக்கேள்விகளுக்கான விடைகளைத் தேடியறிவதில் உள்ள பிரதானமான சிக்கல் ஒன்றினைப் புரிந்து கொள்ள வேண்டும். மட்டக்களப்புத் தேசத்திலே நாடோடி வேட்டைக் காலம், நாடோடி மந்தைக் காலம், நிலையான பயிர்ச்செய்கைக் காலம் - நிலவுடமைச் சமுதாயம், நவீன சமகாலச் சமுதாயம் என்ற சமூக வளர்ச்சிகள் காணப்பட்டுள்ள போதிலும், ஆதிகாலத்திற்குரிய நாடோடி வேட்டையாடும் சமூகத்தினரில் சில சமூகப்பிரிவினர் இன்னமும் தனித்துவமான பொருளாதார - சமூக அம்சங்களுடன் மட்டக்களப்புத் தேசத்திலே வாழ்ந்து வருகின்றார்கள்.

நாடோடி வேட்டையாடுவோரை நாம் “வேடுவர்” என்ற பொதுப் பெயரில் அழைத்து வருகிறோம். ஆனால் அவர்களிடையே பல்வேறு குலங்கள் இருந்துள்ளன என்பது தற்போது

**கிரான் விஜய்**

அறியப்பட்டுள்ளது. இத்தகைய குலங்களில் சில, இவ்வாறு தொடர்ந்தும் பழைய சமூக பொருளாதார நிலைமைகளுடன் வாழ்ந்து வருகின்றார்கள் என்றே கருதவேண்டியுள்ளது. இவ்வழியிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுமுள்ளது.

இவற்றை விட, அநுராதபுரத்தை ஆட்சி செய்த குதிரை வியாபாரியின் மகன்களான சேனன், குத்திகன் என்போருக்கும் மட்டக்களப்புத் தேசத்தில் வாழ்ந்த மக்களுக்கும் ஏதெனும் தொடர்புகளைக் காண முடியுமா என்பதனையும் தேடியறிய வேண்டியுள்ளது.

இன்னுமொரு அறியப்படாத விடயமும் உண்டு. மட்டக்களப்புத் தேசத்திலே பெருங்கற்காலப் பண்பாடும் அதனோடான வளர்ச்சிகளும் ஏற்படத் தொடங்கிய காலம், தமிழகத்தில் சங்ககாலம் எனப்படும் எழுத்திலக்கியங்கள் தோன்றிய காலமுமாகும்.

தற்போது சங்ககாலச் சமூகம் பற்றிய ஆய்வுகள் வழியாக இக்காலத்தில் வாழ்ந்த பல்வேறு சமூகப் பிரிவினர் - இனக்குழுமங்கள், சிற்றரசர்கள் பற்றி அறியப்பட்டுள்ளது. சங்க காலத்தில் சிறு நிலப்பகுதிகளில் சிற்றரசுகளைத் தோற்றுவித்த குலக்குழுக்களில் வேளிர், ஆய் போன்றனவும் அடங்கும். (சிவத்தம்பி, பக்:97) மட்டக்களப்புத் தேசத்தில் வேளிர் என்ற பட்டம் பெற்ற நாகர்களின் சிற்றரசுகள்தான் ஏற்பட்டது. எனவே இந்த விடயங்களையும் நாம் தேடியறிய வேண்டிய தேவையுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்ட விவசாய வர்த்தக சர்வதேச கண்காட்சி -2018

4ஆவது முறையாக மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக சர்வதேச கண்காட்சி (BITE 2018) ஒக்டோபர் மாதம் 5,6,7 ஆம் திகதிகளில் சிவானந்தா வித்தியாலய மைதானத்தில் கோலாகலமாக நடைபெற இருக்கின்றது. BITE 2018 சர்வதேச கண்காட்சி Lanka Exhibition and Conferences Private limited(LECS) உடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் சங்கம் நடத்த இருக்கின்றது.

LECS ஸ்தாபனம் பாரிய அளவில் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் கண்காட்சிகளையும் மகாநாடுகளையும் நடத்துவதில் பிரபலமானதும் ஜனாதிபதியின் கௌரவ பரிசுகளை பெற்ற ஒரு ஸ்தானமுமாகும்.

LECS ஸ்தாபனம் யாழ்பாணத்தில் 10ஆவது முறையாக தங்கள் கண்காட்சி நிகழ்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கின்றது.

இந்த கண்காட்சியிலே பின்வரும் தொழில்களுக்கு ஏற்றவாறு காட்சி அறைகள் விற்பனைக்கூடங்கள் என்பன வழங்கப்பட இருக்கின்றன. நிர்மாணத்தொழில், உல்லாசப் பிரயாண விடுதிகள், உணவு தயாரிப்பாளர்கள் உணவு விற்பனையாளர்கள், Bakery உரிமையாளர்கள், வாகன விற்பனையாளர்கள், கனரக விவசாய இயந்திரங்கள், கணனியல்(ICT) விற்பனையாளர்களும், பயிற்று விற்பாளர்களும், வெளிநாட்டு,உள்நாட்டு பிரயாண வசதிகள் செய்து கொடுப்போர்கள், வங்கிகள் சேவைகள், நவீன ஆடைகள், திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன இதில் பங்கு பெற இருக்கின்றன.

கண்காட்சி கிழக்கு மாகாணத்தின் மத்தியில் அமைந்துள்ள மட்டக்களப்பில் நடைபெற இருப்பதால் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலிருந்து சுமார் 60,000 பார்வையாளர்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஒரே கூரையின் கீழ் நுகர்ச்சிப் பொருட்கள் உற்பத்திப் பொருட்கள், விவசாயப்பொருட்கள், இலகுவட்டியில் கடன் வழங்கும் ஸ்தாபனங்களை கண்டறிய மக்களுக்கு வழங்கப்படும் இந்த நிகழ்வு ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமையும். அதுமாத்திரமல்லாமல் பெரிய விநியோகஸ்தர்களுடன் இணைந்து சிறிய உற்பத்திகளை அவர்களுக்குரிய உற்பத்திப் பொருட்களை வாங்குவதற்கான உதவித்திட்டமும் பெரிய இறக்குமதியாளர்களிடமிருந்தும் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கு நேரடியாக அவர்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்குவதற்கும் ஓர் இணைப்பு நிகழ்சித்திட்டம் நடைபெற இருக்கின்றது.

இந்த நிகழ்சியின் போது இரண்டு




நாட்களுக்கு இசை நிகழ்ச்சியானது பிரபலம் வாய்ந்த கலைஞர்களினால் ஆடல்,பாடல் கொண்டாட்டங்களுடன் நடைபெற இருக்கின்றது. அத்துடன் சிறுவர்களுக்கான சிறுவர் பூங்கா என்ற நிகழ்ச்சியும் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

--- ந.சுந்தரேசன்
தலைவர்
மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் சங்கம்
32 / 1, தாமரைக்கேணி வீதி,
மட்டக்களப்பு



# லண்டன் ஈழப்பதிஸ்வரர் ஆலயமும் புலையவெளி கிராமத்தின் அபிவிருத்தியும் - ஓர் பார்வை

பதுளை பிரதான வீதியிலே செங்கலடியிலிருந்து, 7 Km தூரத்தில் இயற்கை வளங்கள் சூழப்பெற்ற அதாவது செந்நிற மண்ணையும் கிழக்கின் திசையில் மீன்கள் பாடும் வாவியுடன் விளைந்த ஆற்றினையும், முதிரையடி ஏற்றம் என்று பெயர் பெற்ற உயரமான நிலப்பரப்பையும் கொண்டமைந்த ஓர் அழகிய கிராமம்தான் புலைய வெளி. இக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் பங்குடாவெளி எனும் தாய்க் கிராமத்தில் வசித்தவர்களாகவும் சேனைப் பயிர் செய்கைகாக புலைய வெளி கிராமத்தை பயன்படுத்தியும் பின் படிப்படியாக கிராமத்தில் வாடிகள், குடிசைகள் அமைத்து குடியேறியதாகவும் கூறப்படுகின்றது.

புலையவெளி கிராமமானது போருக்கு முன்னரான காலப்பகுதியிலும், பின்னரான காலப்பகுதியிலும் அயல் கிராமங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின் தங்கிய கிராம மாகவே காணப்பட்டது. அதாவது வாழ்வாதார அபிவிருத்தியிலும் சரி, கிராம அபிவிருத்தியிலும் சரி, சிறுவர்களின் கல்வியிலும் சரி பின் தங்கிய நிலையே காணப்பட்டது.
இவ்வாரன இந்த நிலைமையை மாற்றி முற்று முழுதாக கிராமத்தை தத்தெடுத்து பல அபிவிருத்தி வேலைகளை செய்ய முன்வந்தனர் லண்டன் ஈழப்பதிஸ்வரர் ஆலயத்தினர். இச் செயற்றிட்டமானது 2016 ம் ஆண்டு ஜனவரி மாதம் புலைய வெளி கிராமத்தை லண்டன் ஈழப்பதிஸ்வரர் ஆலயத்தினர். பார்வையிட்டது மாத்திரம் அல்லாது 2016 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ம் திகதி எமது கிராமத்தினை தெரிவு செய்து இருப்பதாகவும் தாம் அன்றிலிருந்து அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்க உள்ளாதாகவும் மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்த ஈழப்பதிஸ்வரர் ஆலய தலைவர் திரு ராஜசிங்கம் ஜெயதேவன் ஐயா அவர்கள் அனுப்பியதாகவும் கூறினார்கள்.

அன்றிலிருந்து கிராமத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக முதலாவதாக குடிநீர் பிரச்சினையையும், இரண்டாவதாக புதிய பேச்சியம்மன் ஆலய கட்டுமான பணிகளையும், ஆலயத்தை முதன்மைப்படுத்தி சில வாழ்வாதார முயற்சிகளையும் முன்னெடுக்க முயன்றார்கள்.

லண்டன் ஈழப்பதிஸ்வரர் ஆலயத்தினர் கிராமத்தில் காலடி பதித்தது புலைய வெளி கிராமத்தின் ஒரு பொற் காலம் என்றே கூற முடியும். ஒரு அரசினால் கூட செய்யமுடியாத அபிவிருத்தியை எமது இக் கிராமத்தில் செய்தார்கள். இக் கால கட்டத்திலே புலையவெளி அதனுடன் இணைந்த தம்பானம்வெளி கிராமங்களில் குடி நீர் பிரச்சினை நிவர்த்தி செய்யப்பட்டது. புலையவெளி விநாயகர், பேச்சியம்மன் ஆலயங்கள் கட்டப்பட்டு குடை முழுக்கு செய்யப்பட்டது. தம்பனாம்வெளி நாகதம்பிரான் ஆலயம் அடிக்கல் நடப்பட்டு, கட்டுமான வேலைகள் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. மைதான புனரமைப்பு மற்றும் கட்டுமான அபிவிருத்தி பணிகள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. இதானால் கிராம வாசிகள் அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடனும் ஆலயத்திலும் செய்யும் அபிவிருத்தி வேலைகளிலும் மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வந்தார்கள். அது மட்டுமல்லாது பதுளை வீதி கிராமத்தின் நுழைவாயிலிலே அமைக்கப்பட்டுள்ள சிவன் சிரத்துடன் கூடிய அம்மன் சிலை, அதனுடன் இணைந்த அபிவிருத்தி வேலைகள் நடைபெரும் மைதானம் போன்றவைகள் பதுளை பிராதன வீதியில் போகும் அனைவரையும் மாத்திரமல்ல அயல் கிராமங்களையும் ஒரு முறை திரும்பி பாக்க வைத்தது என்றால் அதன் பெருமை லண்டன் ஈழப்பதிஸ்வரர் ஆலயத்தினரையே சாரும்.

**லோ. அனோஜன்**

இவ்வாறு மிக மிக துரித கதியில் அபிவிருத்தி கண்டு வரும் கிராமத்தில் பலரின் கண்ணூறோ தெரியவில்லை. சிற் சில பிரச்சினைகள் தோன்றி மறைவாயின. இதனால் மக்களின் அபிவிருத்தி தொடர்பான ஈடுபாடு நாட்டம் குறைந்தது. கிராமத்தினுள்ளே பிரிவினைகள் ஏற்பட்டன. இவற்றை நிவர்த்தி செய்ய ஒரு ஆளுமை மிக்க தலைமைத்துவமும் அனைவரையும் ஒன்றிணைத்து செல்லக் கூடிய முகாமைத்துவமும் இக் கிராமத்தில் காணப்படாமையே ஆகும். இவைகள் ஈழப்பதிஸ்வரர் ஆலயத்தினரின் அபிவிருத்தி பணிகளில் முட்டுக்கட்டையாக இருந்தது. மாத்திரமல்ல அவர்களின் அபிவிருத்தி வேலைப்பாடுகளும் பின் தள்ளிப்போனது.



இதனை நிவர்த்தி செய்து இடை நின்ற வேலைகளை முன்னெடுப்பதற்காக கிராமத்தில் அனைவரும் ஒன்றுப்பட்டு சீரானதொரு ஆலய நிருவாகத்தினை மாற்றி முரண்பாடுகள் ஏற்படதாவாறு அனைவரும் கை கோர்ப்போம் என கடந்த 23.09.2018 அன்று வாக்கு கொடுத்துள்ளனர்.
இதனால் இடைநின்ற மைதான வேலைகள், திண்ணைப் பள்ளிக்கூடம், அரங்கு, காலையில் பள்ளி செல்லும் மாணவர்களுக்கான உணவு வசதிகள், அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான உணவு வசதிகள், கணணி பாடநெறிகள், தையல் பயிற்று நெறிகள், வாழ்வாதார, தொழில் பயிற்றுவிப்புகள் என்பன மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன. இதனால் மக்கள் இயங்க ஆரம்பித்துள்ளன. இதனால் மக்கள் ஆரம்ப காலங்களில் இருந்த மகிழ்ச்சியோடு உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.
இக் கால கட்டங்களிலே புலையவெளி கிராமத்தின் ஒருவராக வயது முதிர்ந்து ஓய்வு பெரும் காலத்தில் கூட களத்தில் நின்று பணி புரிந்த இன்று எங்களை விட்டு நீங்கிய அமரர் கலாநிதி இ. நரேந்திரன் ஐயாவை மறக்க முடியாது. இப் பணியானது வெற்றிகரமாக நிறைவுப் பெற்று மக்கள் மகிழ்ச்சியுற இறைவனை பிரார்த்திக்கிறேன்.

# “உ” போட்டு “அ” எழுதினேன்...



தீரா நினைவுகள்...

உசுக்குட்டிப் பருவம், நாலு கால் பாய்ச்சலில் நினைவுகள் துள்ளிக் குதிக்கிறது. நான் பள்ளிக்கூடம் சென்ற முதல் நாள். என் வாழ்வில் அற்புத நாள். மீராவோடை சட்டிபானைத் தெருதான் நான் பிறந்த ஜென்ம பூமி. புழுதியில் பிறந்து ஓடையில் குளித்து களி கொண்டாடிய பொழுதுகள்.

1953 அரிவரி வகுப்பில் சேர்வதற்காக வாப்பாவின் கை பிடித்து, குருத்து மணலில் பிஞ்சுக் கால்கள் புதையப் புதைய கமக்கட்டுக்குள் இடுக்கிய சிலேட், பென்சில் குச்சியுடன் பயணித்த அந்த முதல் நாள் இன்றும் நெஞ்சில் அப்படியே ஈரம் சொட்டச் சொட்ட....

எங்கள் குடிசையிலிருந்து தெற்கு நோக்கிய முடிவில் எனது பள்ளிக்கூடம். அகன்ற செம்மண் சாலையின் அருகில் சுண்ணாம்புக் காவி படிந்த செங்கல் துருத்திக் கொண்டு அந்தக் கட்டடம் திகழ்ந்தது. அன்றுதான் அத்துனை பெரிய கட்டடத்தைப் பார்க்கிறேன். பெரிய பெரிய உலாத்தைகளும், வளைகளும், கை மரங்களும். கூரையில் கொழுக்கி ஓடு. எங்கள் பாடசாலை வளவைச் சுற்றி நான்கு புறமும் பிரமாண்டமான வாகை மரங்களும், கூளா மரங்களும் நிறைந்து பாடசாலைக்கு குளிரூட்டிக் கொண்டிருந்தது.

மேற்குப் புறமாக ஒரு துண்டுப் பூமியில் கத்தரி, கொச்சி, தக்காளி என்று காய்த்துக் குலுங்கியது. அன்று காலையில் பாடசாலைக்கு நுழைந்தும் என் வாப்பாவின் நண்பரான தலைமை வாத்தியார் வாஞ்சையுடன் வரவேற்றார் (சௌந்தர்ராஜன் ஆசிரியர் - மட்டக்களப்பு). அவரை ஊர் மக்கள் “கட்டை வாத்தியார்” என்று அழைப்பர்.

“இவனை அரிவரி வகுப்பில் சேர்க்க கொண்டு வந்திருக்கிறேன் ஐயா!” உடனே அவர் என்னை ஏற இறங்கப் பார்த்து “பிரளிக் காரனாய் இருப்பான் போலும்” என்றவர் என்னைக் கையில் பிடித்து வெளித்திண்ணைக்கு அழைத்துச் சென்றார். வாப்பா கையோடு கொண்டு வந்த வெள்ளைக் குருத்து மணலை நிலத்தில் கொட்டினார். கட்டை வாத்தியார் அந்த மணலை நிலத்தில் பரத்தி “உ” போட்டுவிட்டு அதன் கீழே எனது கலிமா விரலைப் பிடித்து “அ” எழுதி விட்டார். அந்த நாட்களில் அது ஒரு சடங்கு.

எங்கள் பாடசாலையோ அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. கிண்ணையடியிலிருந்தும் மீராவோடை தமிழ் பகுதியிலிருந்தும் மாணவர்கள் படிக்க வந்தார்கள். அவர்கள் இன்னும் மூவர் உயிருடன் இருக்கிறார்கள். டிரெக்டர் ரைவர் குமார், துறைக்காரர் மகன் துரைராசா, எனது வகுப்பறைத் தோழன் சரவணன் என்போராகும். சரவணன் எனக்கு புதிய புதிய தமிழ் பாடல்களைப் படித்துக் காண்பிப்பான். அவ்வாறு அவன் சொல்லித் தந்த பாடல்களில் ஒன்று

“ஓ! ரசிக்கும் சீமானே, ஜொலிக்கும் உடையணிந்து...”

இன்றும் அந்தப் பாடல் நெஞ்சில் நிறைந்து கிடக்கிறது. பின்னாளில் நான் பாடகராக திகழ்ந்ததற்கு சரவணனே எனது முதல் குருவானார்.

**எஸ்.எல்.எ. ஹனீஃபா**

எங்களோடு பெண் பிள்ளைகள் படித்த ஞாபகம் இல்லை. கூளா மர நிழலில்தான் எங்கள் அரிவரி வகுப்பு. பாடசாலையின் வடக்கு வீதியின் கரையில் கிரீன் துறையின் சில்லறைக் கடை. அன்றைய நாட்களில் மனிதர்களின் அடிப்படை வாழ்க்கைக்கு தேவைப்பட்ட ஒரு பத்து பன்னிரெண்டு பொருட்கள் இருக்கும். இன்று போல் அன்று இல்லை. இன்றைய பிளாஸ்டிக் குப்பைகளும் கடைகளில் இல்லை.

போத்தல்களில் தோடம்பழ முட்டாசு. அது மகாராணியின் ஊரிலிருந்து வருவதாகச் சொல்வார்கள். ஒரு சதத்திற்கு இரண்டு முட்டாய்கள். ஒரு மிட்டாயை வாயில் வைத்தால் அது கரைந்து தொண்டைக்குழிக்குள் இறங்க நீண்ட நேரம் எடுக்கும். பாடசாலையை விட்டு பகல் வீட்டுக்குப் போகும் வரை தோடம்பழம் மணக்கும்.

அப்படியொரு முட்டாசு... அப்படியொரு மணம்... அப்படியொரு காலம்... 1950களில் மீராவோடை, ஓட்டமாவடி, வாழைச்சேனை என்ற இந்த மூன்று கிராமங்களிலும் மீராவோடை ஒரு துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. ஓட்டமாவடியிலிருந்து கமம் செய்பவர்கள் அனைவரும் மீராவோடைத் துறையால்தான் வள்ளங்களிலும், தோணிகளிலும் அக்கரைப்பட்டு வயலுக்குள் செல்வார்கள். அப்பொழுது புதுவெளிப்பாலம் கட்டப்படவில்லை. விடிய விடிய துறைமுகம் களைகட்டும். துறைக்காரரின் புரைவாடியில் பொண்டுகள் பாலப்பம், வண்டப்பம் சுட்டும் புட்டு அவித்தும் விற்பார்கள். இறால் குழம்பும் புட்டும், அப்படியொரு ருசி. எங்கள் ஊர் ஆற்றில் பிடிபடும் இறாலிற்கு தனி ருசி.

வாரத்தில் மூன்று நாட்கள் தவறாமல் மழைபெய்யும் காலம் அது. பாடசாலையின் ஆசிரியர்களாக அண்மையில் தனது 98வது வயதில் காலமான வாழைச்சேனை விபுலானந்தர் வீதியைச் சேர்ந்த திரு. வடிவேல் ஆசிரியர் அவர்கள் எங்களுக்கு கணிதம் படித்துத்தந்தார்.

அரிவரி வகுப்பில் ஐந்தாம் வாய்ப்பாடு வரையும் பாடமாக்குவதுதான் எங்கள் படிப்பு. பாலமுனையைச் சேர்ந்த மர்ஹூம் ஜமால்தீன் ஆசிரியர் அவர்கள் ஆங்கிலம் கற்பித்தார். மர்ஹூம் அச்சி முஹம்மது மௌலவி அவர்கள் இஸ்லாம், கட்டை வாத்தியார் தமிழ் பாடத்திற்கு பொறுப்பாக இருந்தார். இன்னும் ஒரு பெண் ஆசிரியர் அவர் பெயர் ஞாபகம் இல்லை. அவரின் கணவர் பெரும் செல்வந்தர். ஒவ்வொரு நாளும் அவரின் கணவர் Austin Cambridge Car இல் அவரை ஏற்றி வந்து இறக்கி விட்டுச் செல்வார்.

தொடர்ச்சி... (பக்கம் -06 )

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்

## அந்த நாள் மீளாதோ?

'கூடியிருந்து கிணறு வெட்டிய, ஓலை கட்டிய காலமெல்லாம் கடந்து போச்சு. இதனால் உறவுகள் ஒன்று சேர்ந்து மகிழ்ந்த காலங்கள் எல்லாம் நினைவில் மாத்திரம் ஆச்சு..' என விமலுடன் கந்தசாமி பருத்திச்சேனை கிராமத்தில் உள்ள சந்தியில் நின்று பேசிக்கொண்டிருந்தான்.

இயற்கையைப் பயன்படுத்தி இயற்கையோடு மனிதர்கள் வாழ பழகிக்கொண்டனர். அதேவேளை இயற்கையையும் நேசிக்கத்தொடங்கினர். தனது தேவைகளை இயற்கையின் மூலமாகவே நிறைவேற்றிக்கொண்டனர். உணவுகளை இயற்கையில் இருந்து பெற்றமை போன்று, உறையுளையும் இயற்கைப் பொருட்களையே கொண்டு அமைப்பதற்கு ஆரம்பத்தில் தலைப்பட்டனர். பின்னர் படிப்படியாக மாற்றங்கள் ஏற்பட்டு, இயற்கையை அழித்து, செயற்கையான உற்பத்திகள் பலவற்றினை மேற்கொண்டு, பல வடிவங்களிலும், அண்ணார்ந்து பார்த்தும் முடிவை கண்டுபிடிப்பதற்கு கஸ்டப்படுகின்ற உறையுளையும் தற்போது அமைந்துக்கொண்டுள்ளனர்.

இதற்கு விதிவிலக்கில்லாதவர்களாக மட்டக்களப்பு படுவான்கரை மக்களும் உள்ளனர். இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு படுவான்கரைப்பிரதேசத்தில் அநேகமானவை இயற்கைப் பொருட்களை கொண்டமைந்த வீடுகளேயாகும். குறிப்பாக வீடு அமைப்பதற்கு இயற்கையில் கிடைத்த பொருட்களான புல், மரம், கொடி, களிமண், ஓலை, வைக்கோல் போன்றவற்றினை பயன்படுத்தி அமைக்கப்பட்ட மண்வீடுகளே காணப்பட்டன. இவ்வீடுகளில் இயற்கை குளிர்ச்சியும் மேலோங்கியிருந்தது. இவற்றினை அமைப்பதற்கு மக்கள் பெருமளவில் பண ரீதியான சிரமங்களை எதிர்கொள்ளவில்லை. பணமின்றி வீடுகளை அமைக்கக்கூடிய நிலைமைதான் இப்பகுதி மக்களுடையே காணப்பட்டது. அதேவேளை மக்களின் ஒன்றிணைவு அவசியப்பட்டது. இதனால், அயலவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து வாழ்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இயற்கையிலான அமைப்பு முறைகளையே இன்றைய சுற்றுலாத்துறைக்கு அவசியமாக இருக்கின்றமையினையும், களிமண் வீடுகளிலே சுவாத்தியத்தினை உணர்ந்து, அவ்வாறான அமைப்பு முறைகளை வெளிநாட்டார் விரும்புகின்ற நிலை உள்ளதெனில் தமிழர்களின் அறிவாற்றலும் மேலோங்கியிருப்பதனை எடுத்துக்காட்டுகின்றது. வேலைகள் செய்யும், வேலைகள் பற்றிய திட்டமிடல் ஆரம்பம் முதல் நிறைவு வரை காணப்பட்டது. குறிப்பாக, வேலைகளைச் செய்வதற்கு முன், நாள் குறித்து, தேவையான பொருட்களை தயார்படுத்தி, உரியவர்களுக்கு கூறி அவற்றினை அமுல்படுத்துகின்ற முறையான நீண்ட நாள் திட்டமிடல்களை இதன்மூலமாக காணமுடிந்தது. இது சிறந்த அனுபவ கற்றலாக அமைந்திருந்தது.

படுவான்கரையில் உள்ள மக்கள் அனேகமான வேலைகளை சிரமதானமாகவும், ஒன்று சேர்ந்துமே செய்து வந்தனர். அதேவேளை சமயவிழுமியங்களுக்கு முன்னுரிமை அளித்தவர்களாகவும் செயற்பட்டனர். இதனை சுபநாள்களை அவதானித்து, காரியங்களை தொடங்குவதும், வீடு,



கிணறு கட்டும்போது சாத்திரியர்கள் பொருத்தமான இடங்களை தெரிவு செய்வதும் சமயத்தின்பால் கொண்டிருந்த நம்பிக்கையை வலுர்ச்சேர்ப்பதாக அமைந்துள்ளது.

ஒன்று சேரலை எடுத்துக்காட்டுவதாக, கிணறு வெட்டுதல், ஓலை கட்டுதல், வாழ்வு, சாவு போன்ற காரியங்கள் நடைபெறும் போது, படுவான்கரையில் அவதானிக்க முடியும். என்கிறார் கந்தசாமி. குறிப்பாக படுவான்கரை பகுதியில், வீடொன்றில் கிணறு வெட்டுவதாயின் அருகில் உள்ள ஆண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கிணறு வெட்ட ஆரம்பித்துவிடுவர். இவர்களுக்கு வேதனங்கள் வழங்கப்படாது. உணவுமட்டுமே வழங்கப்படும். இவர்களுடன் அருகில் உள்ள பெண்களும் உணவு சமைப்பதற்காக இணைந்துவிடுவர். சிறுவர்களும் அருகில் ஓடிஆடி விளையாடுவர். மொத்தத்தில் பல குடும்பங்களின் ஒன்றுசேர் இடமாகவும் அன்றைய நாள் காணப்படும். இதன்மூலம் உறவுகளுக்கிடையே நெருக்கமான உறவாடலும், கடந்தகால சம்பங்களை மீட்டுப்பார்த்தலும், கலகலப்பான பேச்சுக்களும், வேடிக்கைப்பேச்சுக்களும், மகிழ்வூட்டும் பாடல்களை பாடி மகிழ்வதும் நடந்தேறும்.

கிணறு வெட்டுவது புண்ணியமென கூறுவதும், அதற்கு முன்னிப்பதும் படுவான்கரை மக்களோடு பழகிப்போனதொன்று. படுவான்கரைப் பகுதியில் பெரும்பாலான வீடுகள் கடந்த காலங்களில் களிமண் சுவர்களையும் ஓலை அல்லது வைக்கோல்களை கூரையாகவும் கொண்டிருந்தன. இதனால் வருடாந்தம் ஓலை கட்டுவதற்கு அருகில் உள்ள அனைவரும் ஒன்றிணைவர். வேதனங்கள் இன்றி உணவுகளுடன் வேலை செய்து முடிப்பதும் நடந்தேறும். என கந்தசாமி கூறினார்.

திருமணம், பிறந்தநாள், பூப்புனித மஞ்சள் நீராட்டு விழா போன்ற மங்கலகரமான நிகழ்வுகளுக்கும், மரணச்சடங்கு போன்ற அமங்கல நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு, பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றமையும் இன்றும் மாறாததொன்று.

நவீனபோக்கும், இயந்திர உலகிற்கு ஈடுகொடுத்து, இயந்திரமாக மனிதர்கள் செயற்படவேண்டிய அவசியத்தினாலும், புதிய வசதிவாய்ப்புக்களை அணுகவேண்டிய நிலையின்பாலும், களிமண் வீடுகள் மிகவும் குறைந்தும்,

படுவான் பாலகன்

இயந்திரங்கள் வருகையினால் மனிதவளங்களின் தேவை குறைவின் அடிப்படையிலும், வாழ்வாதாரத்திற்காக நேரமின்றி ஓடுகின்ற நிலையின்பாலும், ஒன்றுசேரல் இன்மை மேலோங்கி உள்ளது. இதனால் இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்வது இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக மன ஆதங்கங்கங்களை உள்ளத்திலே உள்ளடக்கி மனஅழுத்தங்களுக்கும் பலர் உள்ளாகி உள்ளனர். பலரின், மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கும், மனநிம்மதிக்கும் படுவான்கரை சூழல், உறையுள் அமைப்புக்கள், ஒன்றுசேரல் பண்புகள் வித்திட்டிருந்தது. கூடிவாழ்தல், உறவுகளோடு நேரத்தினை கழித்தல் குறைந்தமையினால், பலரின் வாழ்க்கை வெறுப்பான வாழ்க்கைகளாக மாறியிருக்கின்றமையே உண்மையே என கந்தசாமி கூறியதோடு, தானும் கூடியிருந்து உலாவிய நினைவுகளையும் நினைவுபடுத்தியவனாக, அதனை எதிர்பார்த்து பெருமூச்சு விட்டவனாக அவ்விடத்திலிருந்து அகன்றுகொண்டான்.

தொடர்ச்சி...

## "உ" போட்டு "அ" எழுதினேன்...

பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி பள்ளிவாசல் மரைக்கார்மார்களின் மேலான பங்குபற்றுதலுடன் நிகழும். அப்பொழுது எங்களுக்கு விளையாட்டு மைதானம் இல்லை. தற்போது வாழைச்சேனை கமநல சேவை நிலையத்தின் தெற்குப் புறமாக கிடந்த பாரிய புற்தரையில் தான் இல்ல விளையாட்டுப் போட்டி நடக்கும். மீராவோடையில் இருந்து மாணவர்களும், ஆசிரியர்களும் அங்கு செல்வோம். கருவாகேணி கிராமம் அப்பொழுது இருக்கவில்லை. அது பெரும் காடு வனமாகக் கிடந்தது.

ஒவ்வொரு இல்லத்திற்கும் ஒவ்வொரு காட்டு மா மரம் அடையாளமாக இருக்கும். மீராவோடையின் சிறந்த ஓட்ட வீரர்களாக நானும் மர்ஹூம் பட்டறையர் மீராசாஹிப் போடியாரின் மூத்த மகன் ஈசாலெப்பையும் திகழ்ந்தோம்.

காட்டு மா மர நிழலில் புற்தரையில் அன்று ஓடிய நான் பின்னாளில் அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் கொழும்பு ஓவல் மைதானத்தில் ஓடி வெற்றி பெற்றது என்னளவில் ஒலிம்பிக் சாதனைதான்.

மீராவோடையில் கோலாட்டம் என்னும் களிகம்பும், கோடு கச்சேரியும் பெருநாள் தினங்களில் தொடர்ந்து நாளைந்து நாட்களில் தொடரும். இஷா தொழுத கையோடு ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று பெரும் பெரும் வெட்டை வளவுகளில் கூடுவார்கள். சாமக்கோழி கூவும் பொழுதுதான் வீட்டுக்குச் செல்வோம். ஒவ்வொரு மனிதனுக்கும் பாடசாலை நாட்களும், அந்த வாழ்வும் ஆனந்தம் தரக்கூடியது. வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் எண்ணி எண்ணி மகிழக்கூடியது. மாணவப் பருவத்தில் பள்ளிக்கூடங்கள் சிலருக்கு ஆசிர்வாதங்களாகவும் பலருக்கு சாபங்களாகவும் வாய்த்துவிடுகிறது.

சாபங்களைச் சரித்திரங்களாக மாற்றியவர்களும் உண்டு. SSC இறுதிப்பரீட்சையில் கணிதப்பாடத்தில் சித்தியடைய தவறிய எனது வகுப்புத் தோழர்களில் சிலர் இந்த வயதில் படும் துயரங்களைப் பார்க்கும் போது மனம் பதறுகிறது.

எங்களின் ஒவ்வொரு ஆசிரியரும் பெரும் ஆளுமை கொண்டவர்களாக இருந்தார்கள். ஒரு ஆசிரியர் புகைத்ததையோ, கலர் ஆடைகளில் பாடசாலைக்கு வந்ததையோ நான் ஒரு போதும் காணவில்லை.

அவர்களுடைய பத்து விரல்களும் மல்லிகைப் பூப்போல் வெள்ளைவெளீரென்டு இருக்கும். சோக்கட்டியைப் பிடித்து கரும்பலகையில் எழுதும் போது சோக்கட்டியின் வெண்மையும்... உள்ளங்கையின் வெண்மையும்... என்னால் இத்தனை வயதிலும் மறக்கமுடியவில்லை.

இன்றைய ஆசிரியர்களின் ஆடையலங்காரங்கள், கோலங்களைப் பார்க்கும் போது குமட்டலாக இருக்கின்றது. மாணவர்கள் யார்? ஆசிரியர்கள் யார்? என்று அடையாளம் காணமுடியவில்லை.

ஆசிரியர் ஆசிரியர் போல, மாணவர் மாணவர் போல, கல்வி கல்வி போல...

அன்று கல்வி ஒரு தவம், இன்று அதுவே அனைவருக்கும் வதம்.

கல்வி சந்தைப் பொருளானதும் அதன் மகத்துவம் காணாமல் போனதுவோ..?

நாங்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்காவிட்டால் மறுநாள் எங்களைத் தேடி வகுப்பாசிரியர் எங்கள் வீடுகளுக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் ஆசிரியம்!

இந்தக் கணத்தில் அந்த ஆசிரியப் பெருந்தகைகளை கண்மூடி மெய்சிலிர்க்க, மௌனித்து நெஞ்சம் கொள்கிறேன்.



# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 18

## பல சொல்ல மறந்த கதைகளைச் சொல்லும் பண்டாரநாயக்கா மாவத்தை

ரஸஞானி

கடந்த வாரம் இந்தத் தொடரில் நாம் குறிப்பிட்ட அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடு உற்பத்தி செய்யும் மஸ்கன்ஸ் நிறுவனத்திற்கு முன்னால் செல்லும் பண்டாரநாயக்கா மாவத்தை பற்றி அறிந்திருக்கிறீர்களா?

களனி கங்கை தீரத்தில் தலைநகரில் அமைந்துள்ள ஏனைய வீதிகளைப்போன்றதுதான் இந்த மாவத்தையும். ஆனால், இந்த வீதியிலும் பல சுவாரஸ்யமான கதைகள் உள்ளடங்கியிருக்கின்றன.

ஏன் இந்த வீதிக்கு இலங்கையின் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பெயர்வந்தது...?அவர் அத்தனகல்லை தொகுதியில் ஹொரகொல்லையில் பிறந்தமையால் அந்தப் பிரதேசத்தை ஹொரகொல்லை வளவ்வை என்றும் அழைப்பர்.

பண்டாரநாயக்கா குடும்பத்தினருக்கு இந்தப்பத்தியில் நாம் குறிப்பிடும் மாவத்தையிலும் ஒரு பெரிய காணி முன்பிருந்திருக்கிறது.

பண்டாரநாயக்காவுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்ட தமிழரசுக்கட்சியின் தலைவர் (அமரர்) தந்தை செல்வநாயகத்திற்கும் இந்த மாவத்தையில் ஒரு காணி முன்பிருந்தது. அங்கிருந்த ஒரு இல்லத்திலிருந்துதான் சுதந்திரன் பத்திரிகை 1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி வெளிவரத்தொடங்கியது.

முதலில் நாளிதழாக வெளியான சுதந்திரன், 1951 ஆம் ஆண்டு முதல் வார இதழாக 1977 வரையில் வெளிவந்து, தலைநகரில் அதற்கு பாதுகாப்பில்லை என்பதனால் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்து 1983 வரையில் வெளியாகி நின்றது.

பண்டாரநாயக்கா மாவத்தையில் சுதந்திரன் பத்திரிகை தொடங்கப்பட்டவேளையில் அதன் முதலாவது ஆசிரியராக இருந்தவர் தேசபக்தன் என்னும் பட்டம் பெற்ற கோ. நடேசய்யர். அதன்பின்னர் பல எழுத்தாளர்கள் அங்கு ஆசிரியபீடத்தில் பணியாற்றியிருக்கிறார்கள்.

எஸ்.டி. சிவநாயகம், செ. இராசதுரை, அ.ந. கந்தசாமி, சில்லையூர் செல்வராசன், பிரேம்ஜி ஞானசுந்தரன் ஆகியோரும் இறுதிக்காலத்தில் கோவை மகேசனும் சுதந்திரனில் பணிபுரிந்துள்ளார்கள்.

கவியரசு கண்ணதாசன் இலங்கைக்கு வந்த சமயத்தில் சுதந்திரன் காரியாலயத்திற்கும் வருகை தந்துள்ளார். பல ஈழத்து எழுத்தாளர்களின் கன்னிப்படைப்புகளுக்கு அக்கால கட்டத்தில் களம் வழங்கி அறிமுகப்படுத்தி ஊக்குவித்துள்ள சுதந்திரன், காலப்போக்கில் கோவை மகேசன் ஆசிரியரானதும் 1970 இற்குப்பின்னர் தீவிர தமிழ்த்தேசிய நிலைப்பாட்டினை எடுத்தது. 1970 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ - என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகியோரின் கட்சிகள் இணைந்த கூட்டரசாங்கத்திற்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையே இனப்பிரச்சினை தொடர்பாக முரண்பாடுகள் உக்கிரமடைந்தமையாலும் 1972 இல் நடைமுறைக்கு வந்த புதிய அரசியலமைப்பினாலும் சுதந்திரனில் தமிழ் உணர்வைத்தூண்டும் செய்திகளுக்கும் ஆக்கங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

சுதந்திரன் வெளியான குறிப்பிட்ட இல்லத்தில் கவிஞர் காசி ஆனந்தன், வாகரை வாணன் முதலான எழுத்தாளர்களும் தங்கியிருந்துள்ளனர்.




தந்தை செல்வநாயகத்திற்குப்பின்னர் அவரது தனயன் சட்டத்தரணி சந்திரகாசனின் நிருவாகத்தின் கீழ் சுதந்திரன் வெளியானது. இங்கிருந்து சுடர் என்ற கலை, இலக்கிய இதழும் வெளியாகியது. இதன் ஆசிரியராக மட்டக்களப்பு கிரானைச்சேர்ந்த கனகசிங்கமும் பணியாற்றியுள்ளார்.

இந்தப்பிரதேசம் முன்னர் தட்டாரத்தெரு என்று அழைக்கப்பட்டது. இங்கு திருவிளங்க நகரத்தார் சமூகத்தினர் செறிந்து வாழ்ந்தமையால் அவர்களின் குடும்பத்துப்பிள்ளைகளின் ஆரம்பக்கல்விக்காக ஒரு செட்டியாரின் பேருதவியினால் கணபதி வித்தியாலயம் 1954 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த 2014 ஆம் ஆண்டு இந்த வித்தியாலயம் தனது வைரவிழாவை கொண்டாடியது.

தற்போது கணபதி வித்தியாலயமும் மக்களின் இடப்பெயர்வு போன்று தரமுயர்த்தப்பட்டு முன்னர் சுதந்திரன் பத்திரிகை பணிமனை இருந்த காணிக்கு இடம்பெயர்ந்துள்ளது.

கொல்லப்பட்ட மனிதர் ஒருவரின் தலைமாத்திரம் பொதி செய்யப்பட்டு அந்த மாவத்தையில் வீசப்பட்டிருந்த செய்தியையும் அண்மையில் படித்திருப்பீர்கள். அந்நபர் பாதாள உலககோஷ்டியினால் கொல்லப்பட்டதாகவும் அவரது உடல் வேறு ஒரு இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின. இத்தகைய துன்பியல்களையும் பண்டாரநாயக்கா மாவத்தை தன்னகத்தே வைத்துள்ளது.

மஸ்கன்ஸ் அஸ்பெஸ்டஸ் தொழிலகம் அமைந்துள்ள ஆமர் வீதியிலிருந்து தொடங்கும் பண்டாரநாயக்கா மாவத்தை நீதிமன்றங்கள் அமைந்துள்ள ஹல்ஸ்டோர்ப் பிரதேசத்தில் முடிவடைகிறது.

இந்தப்பிரதேங்களை உள்ளடக்கிய பகுதியை புதுக்கடை எனவும் அழைப்பர். நானாவித தொழிலகங்கள் இயங்கும் இப்பிரதேசத்தில் மூவின மக்களும் செறிந்து வாழ்கின்றனர்.

நீதிமன்றங்களுக்கு வரும் சட்டத்தரணிகள் தொடக்கம் வழக்குவிசாரணைகளுக்கு தோன்றும் சாட்சிகள் மற்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள், நண்பர்களும் பண்டாரநாயக்கா மாவத்தையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்குச்சென்று வழிபடுவதையும் அவதானிக்க முடியும்.

சட்டத்தரணிகளுக்கோ தாம் ஆஜராகும் வழக்குகளில் வெற்றி கிடைக்கவேண்டும் என்ற பிரார்த்தனை! குற்றவாளிகளுக்காக அவர்களின் உறவினர்களும் நண்பர்களும் விடுதலை வேண்டிப்பிரார்த்தனை! அந்த சுப்பிரமணியக்கடவுள் எத்தனைபேரின் வேண்டுதலை நிறைவேற்றுவார் என்பது அவருக்கே வெளிச்சம்!

பண்டாரநாயக்கா மாவத்தையின் மற்றும் ஒரு எல்லையில் அமைந்துள்ள வாழைத்தோட்டம் பிரதேசத்தில்தான் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும் பிறந்தார். அவரது இல்லத்தின் பெயர் சுசரித்த! அவர் பிரதமராகவும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராகவும் பதவி வகித்த காலகட்டத்தில் இந்தப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் முன்னுரிமை கொடுத்தார்.

இலங்கைத் தலைநகரத்தில் ஒரு காலகட்டத்தில் அமைந்திருந்த கட்டிடங்கள் ஒல்லாந்தர் காலத்திலும் அதன் பின்னர் பிரிட்டிஷாரின் காலத்திலும் உருவாக்கப்பட்டவை. சுதந்திரத்திற்குப்பின்னர் பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் காலத்திற்கு காலம் தலைநகரத்தை நவீனமயப்படுத்திவந்தார்கள்.

ஏற்கனவே பிரின்ஸ் ஒஃப் வேல்ஸ் வீதியில் சுகததாச ஸ்ரேடியம் அமைந்திருக்கத்தக்க நிலையில் ரணசிங்க பிரேமதாச ஏன் கெத்தாராமை என்ற இடத்தில் மற்றும் ஒரு பெரிய ஸ்ரேடியத்தை அமைக்கிறார் என்ற கேள்வியும் முன்னர் எழுந்தது!

சோலியான் குடுமி சும்மா ஆடாது என்று எமது முன்னோர்கள் சொல்வார்கள்.

கொழும்பு மத்திய தொகுதி மூவின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதனால் மூவின மக்களின் ஆதரவும்பெற்ற மூவினத்தலைவர்கள்தான் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகவேண்டும். ரணசிங்க பிரேமதாச தலைநகரத்தின் எதிர்காலம் குறித்து தீர்க்கதரிசனம் கொண்டிருந்தவர்.

கெத்தாராமை பிரதேசத்தில் வாழும் மக்களை இடம்பெறச்செய்வதற்கு வகுத்த திட்டத்தின் பலன்தான் இன்று அங்கு விளங்கும் பெரிய ஸ்ரேடியம். அங்கு வாழ்ந்த மக்களுக்கு கொழும்பின் புறநகரத்தில் முக்கியமாக நவகம்புர, மற்றும் மாளிகாவத்தை பிரசேங்களில் குடியிருப்புகளை அமைத்துக்கொடுத்து, வாக்கு வங்கியை இனரீதியாக நேர்செய்துகொண்டார்.

ரணசிங்க பிரேமதாச அவர்கள் இந்த ஸ்ரேடியத்தின் மைதானத்தில் வேட்டியை மடித்துக்கட்டிக்கொண்டு பந்தை உதைந்து உதைபந்தாட்டத்தை தொடக்கிவைத்த படங்கள் அக்காலப்பகுதியில் ஊடகங்களில் வெளியாகியிருக்கின்றன. அத்துடன் அவரது துணைவியார் நெட்போல் விளையாடிய படங்களும் வெளிவந்துள்ளன.

தற்போது கொழும்பு மாநகர மேயராகியிருக்கும் ரோஸி சேனாநாயக்கா முன்னாள் திருமதி அழகுராணியாகவும் தெரிவானவர் என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

அதனால் தலையிடி மாத்திரைக்கான பெணடோல் விளம்பரத்திலும் அவர் தோன்றியிருந்தார்.

இவற்றை அவதானித்த எதிர்க்கட்சியினர், தங்கள் மேடைகளில் பிரேமாட்ட ஃபுட்போல்! ஹேமாட்ட நெட்போல்! ரோஸிட்ட பெனடோல்! அபிட்ட பொலிடோல்!! என்று பிரசாரமும் செய்துள்ளனர். காலம் இந்த சுவாரஸ்யங்களையும் பதிவுசெய்துகொண்டு களனி கங்கையைப்போன்று துரிதமாக நகர்ந்துகொண்டிருக்கிறது.

(தொடரும்)

## ஊடகவியலாளருக்கு சாமஸ்ரீ விருது.



அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில், சமூக சேவையாளர்களுக்கான சமாஸ்ரீ தேசமான்ய தேசிய விருது வழங்கும் விழா மட்டக்களப்பு, ஏறாவூர் அலிஹார் மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை (22.09.2018ஆம் திகதி ) ஒன்றியத்தின் தலைவர் சாமசிஸ்ரீ நிசாந்த தர்சன ஜெயசிங்க தலைமையில் நடைபெற்றது. இதன்போது மட்டக்களப்பைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளர் சபாநாயகம் சதீஸ்குமார் சாமசிஸ்ரீ தேசமான்ய விருதினைப் பெற்றுக்கொண்டார்.

இந் நிகழ்வில் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் பிரதியமைச்சர் அலி சாஹிர் மௌலானா , மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் போன்றோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.









# மட்டு மாநகரசபை

## 'முகப்பு அலுவலகம் - மக்கள் குறை நீக்கும்!'



புதன்கிழமை அரச நிறுவனங்களை பொறுத்தவரை பொதுமக்களுக்கான தினம். அந்த தினத்தை முடிந்தவரை தமது சேவைகளுக்காக பயன்படுத்திக்கொள்ள முகப்பு அலுவலகத்தை மட்டக்களப்பு மாநகர சபை அமைத்துள்ளது.

சபைக்கு வரும் ஒருவர் எங்கு, எப்போது செல்வது என்று தெரியாமல் தடுமாறுவதை தவிர்ப்பதும் இதன் நோக்கம்.

நாம் அங்கு சென்ற போது மக்களுக்கான பணியில் மிகவும் மும்முரமாக இருந்த மாநகரசபையின் திட்டமிடலுக்கான தலைமை எழுதுவினைஞர் எம். தேவராஜா, எங்களையும் வரவேற்று என்ன தேவை என்பதை வினாவினார்.

வந்த விடயத்தை கூற, தனது பணிகளுக்கு மத்தியில் எமது கேள்விகளுக்கும் பதிலளித்தார். காணி உரிமைகள், கடைகளுக்கான அனுமதி, கட்டிட விண்ணப்பங்கள், காணி பிரிப்பு, சுகாதாரம், சோலை வரி, ஏனைய புகார்கள் ஆகிய விடயங்களுக்காக மக்கள் பெரிதும் முகப்பு அலுவலகத்தை அணுகுவதாக அவர் கூறுகிறார்.



வாரா வாரம் புதன்கிழமைகளில், நகர ஆணையாளர், மேயர், அவர்களது சகாக்கள், ஏனைய பணியாளர்கள் என அனைவரும் பொதுமக்கள் குறைகேட்பதற்காக முகப்பு அலுவலகத்தில் கூடுவதாக தேவராஜா கூறுகிறார்.

அன்று வரும் 90 வீதமான பிரச்சினைகளை அந்த இடத்திலேயே தம்மால் தீர்த்து வைக்க முடிவதாகவும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். ஏனைய பிரச்சினைகள், எதிர்த்தரப்பின் கருத்தை அறிதல் போன்ற அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படும் என்றும் அவர் கூறினார்.



பொதுவாகவே எந்த விடயத்தை எங்கு முறைப்பாடு செய்வது அல்லது யாரை அணுகுவது என்பது குறித்து தெளிவில்லாத் தன்மை பொதுமக்கள் மத்தியில் காணப்படுவதாக அவர் கூறுகின்றார்.

தெருக்கள், வீதிகளை பொறுத்தவரை சில தெருக்கள் மாநகர சபையாலும், ஏனைய சில வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதிகள் திணைக்களம் ஆகியவற்றாலும் பராமரிக்கப்படும் நிலையில், மக்கள் உரியவரை அறிந்து அதற்காக அணுகுவதில் குழப்பமாக இருப்பதாக தேவராஜா குறிப்பிட்டார்.

பெரும்பாலான புகார்கள் நகரப் பகுதியிலேயே இருந்து வருவதாகவும், சத்துருக்கொண்டான், பெரியதுறை போன்ற எல்லைப் பகுதிகளில் இருந்து முறைப்பாடுகள் வருவது குறைவு என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மைக்காலமாக தெருக்களில் நல்ல விளக்குகள் பொருத்தப்பட்டு விட்டதால், தெருவிளக்குகள் குறித்த முறைப்பாடுகள் வெகுவாக குறைந்துவிட்டன என்றார் மகிழ்ச்சியுடன். பொதுமக்களுக்கு மாநகர சபையின் நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வும், பொறுப்புணர்வும் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே தேவைப்படுவதாகவும் அவர் கூறினார்.

## 'வரி அறவீடு திருப்தியில்லை'

மாநகரசபையின் வரி அறவீட்டு மாதத்துக்கு பொதுமக்களின் தரப்பில் இருந்து போதுமான பங்களிப்பு இன்னமும் கிடைக்கவில்லை என்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபையை பொறுத்தவரை இதுவரை அறவிடப்படாத வரியாக 217 மில்லியன் ரூபாய்கள் இருப்பதாகவும், அதில் குறைந்தபட்சம் 65 மில்லியன் ரூபாய்களையாவது அறவிட்டுவிடும் திட்டத்துடன் இந்த வரி அறவீட்டு மாதம் திட்டமிடப்பட்டதாகவும் அவர் கூறினார். இந்த திட்டத்துக்கு ஆசிய மன்றம் தனது அனுசரணையை வழங்கியது.

இருந்தபோதிலும், 4 முதல் 5 மில்லியன் வரையிலான வரியே இதுவரை அறவிடப்பட்டதாகவும் சரவணபவன் கூறுகின்றார்.

இந்த விடயத்தில் பொதுமக்கள் தமது பூரண பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வரியை செலுத்தாமல் மாநகர சபையிடம் இருந்து முழுமையான சேவையை எதிர்பார்ப்பது யதார்த்தமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை இந்த விடயத்தில் ஆசிய மன்றத்தின் அனுசரணையை அவர் வெகுவாக பாராட்டினார்.

## தமிழரசு ஆட்சி அன்னம்மாவை மறக்கலாமா?




1977ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் களம் இறங்கியவர், அக்கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான செ.இராஜதுரை. அதேவேளை அவருக்கு எதிராக வீட்டுச் சின்னத்தில், தமிழரசுக்கட்சியின் சார்பில் இறக்கப்பட்டவர் காசிஆனந்தன்.

காசியானந்தனுக்கு ஆதரவாக தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு பரப்புரை பிரச்சாரங்களை புதூரில் "எங்கள் வாக்கு வீட்டுச் சின்னத்துக்கே" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பிரசுரத்தை புதூரைச் சேர்ந்த கண்ணகை என்ற அன்னம்மா தலைமையில் ஒரு குழு சுவர்களில் ஒட்டிக்கொண்டு இருக்கும் போது, இராஜதுரையின் ஆதரவாளர்களுக்கும் கண்ணகை அவர்களின் குழுவினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு, அவ்வூரில் வசித்த கிளாக்கர் கனகரெத்தினம் அவர்களின் துப்பாக்கியை பலாத்காரமாக பறித்து வந்து அன்னம்மா என்கின்ற அத்தாயை சுட்டனர். அத்தாயின் இரத்தம் பிரசுரத்திலிருந்த வீட்டுச் சின்னத்தை மேலும் சிவப்பாக்க அவர் துடிதுடித்து 07.07.1977ல் அவ்விடத்திலேயே இறந்து போனார். இவரின் மரணச்சடங்கில் இராஜதுரை, காசிஆனந்தன், வெற்றிவேல் விநாயகமூர்த்தி போன்ற அரசியல்வாதிகளும் பங்குபற்றினர்.

மட்டக்களப்பு பான்சாலை வீதியில் காத்தான்குடியைச் சேர்ந்த ஹனிபா என்பவர் முப்பது வருடங்களாக மிளகாய் அரைக்கும் ஆலையை நடாத்தி வந்தார். பின்பு மேலே நான் எடுத்துரைத்த சுட்டுக் கொல்லப்பட்ட அன்னம்மாவின் மகள் குடும்பத்தினர் (மருமகன் பொன்னு இன்னாசி (யோகன்)) என்பவர் மூன்று வருடங்களாக நடாத்தி வருகின்றனர்.

முன்பு மாநகரசபையால் 14.09.2019 வரை இந்த அரைவை ஆலைக்கு அனுமதிப் பத்திரம் வழங்கி விட்டு தற்போது அருகிலிருக்கும் வீடுகள் அதிர்வினால் பாதிக்கப்படுவதாகவும்; துகள்களினால் சூழல் பாதிக்கப்படுவதாகவும் அயலவர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக கூறி 06.06.2018ல் ஆலை தடை செய்யப்படுவதாக மாநகரசபையால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. திரும்பவும் நடாத்த மாநகரசபையால் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன. ஆலையை திரும்ப இயக்க மாநகரவை அறிவுறித்திய கோரிக்கைகளை ரூபாய் எழுபதாயிரத்துக்கு மேல் செலவழித்து, ஆலையை புனரமைத்து மாநகரசபையிடம் அனுமதியை திரும்பவும் கோரியபோது. மேலும் கடையின் வரைபடமும் கட்டிட சான்றிதழும் கேட்கப்பட்டுள்ளது.

தற்போது முன்பிருந்த கட்டிட வரைபடங்களோ அல்லது சான்றிதழோ இல்லாதவர்கள் புதிதாக தற்போது இருக்கின்ற நிலையை எடுத்துரைத்து இவைகளைப் பெற்றுக் கொள்ளலாம், என ஒரு வாய்ப்பை புதிய மாநகர சபை ஏற்படுத்தியுள்ளது. அதற்கமைய மேமிகு மாநகரத்தந்தை இதில் தன் பார்வையை செலுத்துமாறு பாதாளப்பார்வை மூலம் அவதானியார் கேட்டுக் கொள்கிறார்.

தமிழரசுக் கட்சிக்காக உயிர் கொடுத்த அன்னம்மாவின் குடும்பத்தினரின் தொழிலுக்கு அதே கட்சி ஆட்சியமைத்துள்ள மாநகரசபை உதவ வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

ஹனிபா நடாத்தும் போது ஏற்படாத அதிர்வு இப்போது ஏன் வந்தது என்று இவ் வட்டார மக்களும் கேட்கின்றனர்.

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**

# கலித்தொகைஇன்பம்

**(சங்க இலக்கியங்களில் அடங்குகின்ற எட்டுத்தொகை நூல்களிலே ஒன்றாக விளங்குவது கலித்தொகை)**

"கற்றறிந்தோர் ஏத்தும் கலி"என்று புகழ்ந்துரைக்கப்படும் கலித்தொகை முற்றுமுழுதாக அகப்பொருளைத் தாங்கிநிற்கும் சிறந்ததோர் இலக்கியமாகத் திகழ்கின்றது. அகத்திணை சார்ந்த ஏனைய நூல்கள் அன்பின் ஐந்திணை பற்றியவையாக மட்டுமே அமைந்துள்ளன. ஆனால் கலித்தொகை அன்பின் ஐந்திணையோடு கைக்கிளை, பெருந்திணை, மடலேறல் என்பவை தொடர்பான பாடல்களையும் கொண்டுள்ளது. சங்க இலக்கியங்களில் காலத்தால் பிந்தியது கலித்தொகையாகும். மகாபாரதக்கதையின் பல நிகழ்வுகள் கலித்தொகைப் பாடல்களில் சொல்லப்பட்டிருப்பது அதற்குச் சான்றாகின்றது.

ஐவகை நிலங்களையும் அடிப்படையாகக் கொண்டு, குறிஞ்சிக்கலி, முல்லைகலி, மருதக்கலி, நெய்தல்கலி, பாலைக்கலி என்று ஐந்து தலைப்புக்களின் கீழ் தொகுக்கப்பட்ட பாடல்களைக் கொண்டது கலித்தொகை இலக்கியமாகும். அதில் இடம்பெறும் பாலைத்திணைக்கான பகுதி பாலைக்கலி எனப்படுகின்றது. பாலைக்கலியில் 35 பாடல்கள் உள்ளன. அவை செந்தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்த சேரமன்னனான பெருங்கடுங்கோ பாடியவை.

அவற்றில் ஒரு பாடலை இந்தக் கட்டுரையில் படித்து இன்புறலாம்.

கலித்தொகையில் பாலைத்திணைப் பிரிவு துன்ப நிகழ்ச்சிகளைக் கூறுவதாகும். காதலர்களுக்கிடையே பல்வேறு காரணங்களால் பிரிவு ஏற்படுகின்றது. காதலன் போருக்குச் செல்வதாலோ, பொருளீட்டச் செல்வதாலோ, தூதனாகத் தொலைதூரம் செல்வதாலோ ஏற்படுகின்ற அத்தகைய பிரிவுத் துயரின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் பாடல்களைப் பாலைக்கலியில் காணலாம்.

**சட்டத்தரணி, பாடும்மீன்**
**சு.ஸ்ரீகந்தராசா**

பாலைத் திணையின் உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் எனப் பகர்கிறது தொல்காப்பியம்.

கருத்தொருமித்த இருவரின் காதலுக்கு பெற்றோர் எதிர்ப்புத்தெரிவித்தபோது, அவர்கள் இருவரும் ஒன்றுசேர்ந்து வாழ்வதற்காகத் தம் பெற்றோரைப் பிரிந்து ஊரைவிட்டே சென்றுவிடுகின்றார்கள். அந்தச் சூழ்நிலையில் மகளின் பிரிவால் துயரடைந்து அவர்கள் இருவரையும் தேடித்திரியும் தாயொருத்திக்கு அறிவுரைசொல்வதாக அமைந்த கலித்தொகைப் பாடல் அன்றைய மக்களின் வாழ்க்கைமுறையை மட்டுமன்றி, என்றைக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களையும் கொண்டுள்ளது.

மகளைத் தேடிச் சென்ற தாய், வழியில் எதிர்ப்பட்டவர்களிடம், விசாரிக்கிறாள். "எனது மகளும், வேறு ஒருவரின் மகனும் ஒருவரை ஒருவர் விரும்பிக் காதலிக்கின்றனர். அவர்கள் இருவரும் சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ சென்றுவிட்டார்கள். எங்கே போனார்கள் என்று இன்னும் தெரியவில்லை. அப்படிப்பட்ட காதலர்கள் இருவரை எங்கேயாவது நீங்கள் கண்டீர்களா?" என்று கண்கள் கலங்க அவள் கேட்கிறாள்.

"என்மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்



அன்னார் இருவரைக் காணிரோ பெரும?"

வழிப்போக்கர்கள், அவளுடைய கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், அவளுக்கு அறிவுரை கூறுகிறார்கள். எப்படித் தெரியுமா?

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை

மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்?

நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை

நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்?

தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை

யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?

சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே எனவாங்கு, இறந்த கற்பினாட்குஎவ்வம் படரன்மின் சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலைபிரியா ஆறும் மற்று அதுவே."

(பாலைக்கலி- பாடல் 8)

பல்வேறு நறுமணத்துடன் திகழுகின்ற சந்தனம் மலையிலேதான் உண்டாகின்றது. மலைக்கு அதனால் பயனில்லை. அதனை உடலிலே பூசிக்கொள்பவர்களுக்குத்தானே பயன்தரும்? நினைத்துப்பார்த்தால் உன் மகளும் உனக்கு அப்படித்தானே!

முத்துக்கள் நீரிலே பிறந்தாலும் நீருக்கு அவற்றால் என்ன பயன்? அவற்றை மாலையாகக் கோர்த்து அணிபவர்களுக்குத்தானே பயன் உண்டாகின்றது. ஆழ்ந்து யோசித்தால் உன்மகளும் உனக்கு அப்படித்தானே!

ஏழுநரம்புகளிலே தவழ்ந்துவரும் இன்னிசை பிறப்பது யாழிலேதான். ஆனால் யாழுக்கு இசையால் என்ன பயன்? அதனை அனுபவிப்பவர்களுக்குத்தானே பயன் கிடைக்கின்றது.

ஆராய்ந்து பார்த்தால் உன்மகளும் உனக்கு அப்படித்தானே!

எனவே, காதலனுடன் அவள் சென்றுவிட்டாள் என்று வருந்தவேண்டாம். அவளைத் தேடிச் செல்ல வேண்டாம். கற்பில் சிறந்த உனது மகள் தன் காதலனோடு விருப்பத்துடன் கூடிச் சென்றிருக்கிறாள். அது அறநெறிதவறாத ஒழுக்கமாகும் என்பதை நீ அறிந்துகொள்! அவர்கள் மகிழ்ச்சியுடன் நன்றாக வாழ்வார்கள். நீ கவலையை விடு. நல்லது நடந்தது என்று திருப்திப் படு.

என்பதே பாடல்களின் கருத்தாகும். சங்ககாலத்தில் கூறப்பட்டுள்ள இந்தக் கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடியனவாகக் காலத்தை வென்று நிலைத்து வாழ்கின்றன.


# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 31

**தாலி அறுக்க மறுத்த பெண்?**

பொம்பிளயளுக்கு பூவும் பொட்டும் புருசனோடதான் வருதாம். அந்தப் புருசனுக்கு ஆவத்து அந்தரமெண்டா பொம்பிளயள் பூ வைக்ககூடாதாம். இதெல்லாம் தென்னிந்திய சினிமாவோட வந்த வியாக்கியானங்கள்தான். ஆனா உதையெல்லாம் அப்பவே உடைச்சுப்போட்ட ஒரு பொம்பிளயப்பத்தி இப்ப பேசப்போறன். அவளொண்டும் படிக்காத முட்டாளில்லை; இன்னும் நாலு பேருக்கு படிப்பிக்கிற வாத்திச்சி. கலியாணம் முடிஞ்சு ஒரு ரெண்டு மூண்டு மாசம் இருக்கும் அயலுக்க ஒரு செத்தவீடு. அதுகும் ஒரு போராளிதான் மாவீரராயிட்டான்.

அந்த பெடியனுக்கு கலியாணம் நடந்து என்ன...ஒரு இருவது நாள் இருக்கும். மேலால கொண்டந்து கொட்டின குண்டில அவன் போன வாகனமும் அதில போன அத்தின பேரும் கூண்டோட கயிலாயம் போட்டினம். இவன் கலியாணஞ் செய்த பெடிச்சி மட்டக்களப்பு. அந்த



செத்தவீட்டுக்கு இந்த வாத்திபெட்டை போகுது.

போராளியள் கலியாணஞ் செய்யேக்க சம்பளம் வாங்குற உத்தியோகத்தில உள்ளவைய கூடுதலா விரும்பி செய்யிறதுதான். இனி பெடிச்சியளும் பெத்த தாய் தேப்பனும் தவண்டமுசல் அடிச்ச கணக்கில போராளி, அதிலயும் ஒரு பொறுப்பில உள்ளவனெண்டா வரப்போக தேத்தண்ணிய சாப்பாட்டக் குடுத்து ஒப்பேற்றுறதும் உண்டு. அப்பிடி ஒரு லவ்வில முடிச்ச கலியாணந்தான் இந்த பெடிச்சியும்.

பின்ன ஊராக்கள் கூடி சாவீட்டுச்சடங்குகள் செய்யினம். இவள்பாவி எப்பன் அழுது போட்டு மாலைகட்டுறதில இருக்க, சடங்கு சாங்கியங்கள் எண்டு கொஞ்சப்பேர் ஆரவாரப்படுகினம். தாலிகட்டின புதுக்கருக்கு மாறேல்ல. தளையத்தளைய கட்டின மஞ்சள் கயித்தை அவுத்துப்போட வந்திருந்த பெண்டுகள் பெரும் பாடுபடுகினம். சாகக்குடுத்தவள் தாலிக்கயித்தை இறுக்கிப் பிடிச்சுக் கொண்டு கதறுறாள். ஆர்விட்ட ஆர் கேட்ட அமத்திகிமத்தி அவளின்ர தாலியக்கழத்தி செத்தவன்ர கழுத்தில போட்டு விட்டாச்சு.

சூ...உதெல்லாம் நடக்கயுக்க அங்க பெண்போராளியளும் இருந்தவைதான், தளவதிமட்டத்திலயும் ரெண்டு பேர் நிக்கயுக்க நான் பேசலாமே. பொறவு தலையிருக்க வாலாடுறதோ எண்டு அதொரு வில்லங்கமாப் போகும். இனி செத்தவீடு எங்கட பகுதியில்ல அவயட சடங்கு சாங்கியங்கள் எப்பிடியோ? ஆனா இந்த வாத்திப்பிள்ளை வரயுக்க என்னோடதான் வந்தவள். அவளின்ர மனசுக்க இது பெரிய பாறாங்கல்லா இறங்கீட்டுது. என்னோட ஏறுப்படுறாள். ' நீ நிண்டநீ கேட்டிருக்கலாமே. அவை எப்பிடி அந்தமாதிரி தாலியக்கழட்டலாம். நானாயிருந்தா கதையே வேற' நான் அவசரமா அவள அடக்கினன்.

' ச்சீ என்ன வார்த்தை சொல்லுறாய் ங..நீ வாழ வேணும் இன்னும் கனகாலம் வாழுவாய் உந்தக்கதைய விட்டுத்தள்ளு பெரியாக்கள் பேசாம நிக்கினம் நானென்னண்டு பேச' எண்டாலும் எனக்கும் அது கிடந்து உலுப்பத்தான்

**தமிழ்க்கவி**

செய்யிது. என்னவோ சொல்லுவினமே 'படுகளத்தில ஒப்பாரி ஏதெ'ண்டு ஒரு மாசமிருக்கும் மட்டக்களப்புக்கு வேவுக்குப் போன வாத்திச்சியின்ர புருசன் வீரச்சாவெண்டு அறிவித்தல் வருது..ஆனா உடல் வரயில்லை. வேவுக்குப்போனவை வராட்டி அவை வீரச்சாவெண்டுதான் முடிவெடுக்கிறது ஒண்டு. சில நேரம்

தொடர்ச்சி... (பக்கம் -15 )



# விளையாட்டு

## கிழக்குமாகாணத்தின் சார்பில் காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி!



விளையாட்டுத்துறை அமைச்சு வருடாந்தம் நடாத்திவரும் மாகாணங்களுக்கிடையிலான அகில இலங்கை மட்ட ஹொக்கி போட்டியில் கிழக்கு மாகாண அணியாக காரைதீவு ஹொக்கிலயன்ஸ் அணி முதன்முதலாகக் கலந்து கொண்டது.

இப்போட்டி கொழும்பு ரொறிங்ரன் மைதானத்தில் நடைபெற்றது. விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா இத்தேசிய போட்டியை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். காரைதீவு ஹொக்கிலயன்ஸ் அணி அதன் தலைவர் தவராசா லவன் தலைமையில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவாகி பின்னர் கிழக்குமாகாணத்திலும் தெரிவானது.

அதன்பலனாக கிழக்குமாகாண அணியாக இளம் வீரர்களைக்கொண்ட காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி தேசியமட்டப்போட்டிக்கு வரலாற்றில் முதற்றடவையாகத் தெரிவாகி பங்கேற்றது.

வடக்கு மாகாண அணியுடன் மோதியதில் இறுதிநேரத்தில் ஆக 3 கோல் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

இலங்கையின் 9 மாகாணங்களிலிருந்தும் தெரிவான 9 மாகாண ஹொக்கி அணிகள் பங்கேற்றன. முதலில் நொக்கவுட் முறையில் போட்டிகள் நடாத்தப்பட்டன. இறுதிப்போட்டியில் மத்தியமாகாணஅணி முன்னிலை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## கால்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்த விலகல் முறையிலான சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள சீலாமுனை யங்ஸ்டார் மற்றும் கல்லடி கடல்மீன்கள்



மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் ஏ பிரிவு கழகங்களுக்கிடையிலான விலகல் முறைப் போட்டி - 2018 இற்குரிய இறுதிப் போட்டிக்கு கல்லடி கடல்மீன்கள் கழக அணியும் சீலாமுனை யங்ஸ்டார் கழக அணியும் தகுதி பெற்றுள்ளன.

இவ்விறுதிப் போட்டிக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் என கால்பந்தாட்டச் சங்கத்தின் சுற்றுப் போட்டிக் குழுத் தலைவர் பொ.மேர்வின் அரங்கம் செய்திகளுக்குத் தெரிவித்துள்ளார்.

**கௌரீசன்**

## முகத்துவாரம் லைற்ஹவுஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

மட்டக்களப்பு முகத்துவாரம் லைற்ஹவுஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு ஏழு வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான வருடாந்த கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் முகத்துவாரம் லைற்ஹவுஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள ஏ மற்றும் வி பிரிவுக் கழகங்களின் அணிகள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத்யூ விலக்கப்பட்டார்



இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் சர்வதேச போட்டியில் கலந்துகொள்ளும் இலங்கை அணியில் இருந்து முன்னாள் தலைவர் அஞ்சலோ மத்யூ மற்றும் குசால் மெண்டிஸ் ஆகியோர் விலக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிராக விளையாடும் அணியின் விபரத்தை இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

ஆசிய கிண்ண போட்டிகளில் இலங்கை அணி மோசமாக ஆடியதை அடுத்து இந்த வார முற்பகுதியில் அதன் தலைமைப் பொறுப்பில் இருந்து மத்யூ விலக்கப்பட்டார். இப்போது இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களுக்கான அணியில் இருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான சர்வதேச ஒரு நாள் ஆட்டங்கள் மற்றும் டெஸ்ட் போட்டிகள் ஆகிய இரண்டுக்கும் டினேஸ் சந்திமல் தலைவராக இருப்பார்.

## ஆசியக் கிண்ண இறுதிப்போட்டி

ஆசிய கிண்ணத்துக்கான கிரிக்கட் சுற்றுப் போட்டியில் வெள்ளிக்கிழமை இந்தியாவும் வங்கதேசமும் மோதவிருந்தன.

அரையிறுதியில் பாகிஸ்தானை 37 ஓட்டங்களால் வென்ற வங்கதேச அணி இறுதிச் சுற்றுக்கு நுழைந்துள்ளது.

ஆப்கான் அணியுடன் விறுவிறுப்பாக நடந்த அரையிறுதியில் சமநிலை பெற்ற இந்தியா புள்ளிகள் அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு வந்துள்ளது.

இறுதிப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அணி முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறிவிட்டது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

## டான் கிண்ண இறுதிப் போட்டி



மட்டக்களப்பு மாவட்ட கால்பந்து சம்மேளனத்தால் ஏ பிரிவில் பதிவு செய்யப்பட்ட கால்பந்து அணிகளுக்கு இடையிலான டான் கிண்ண சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் மண்முனை தென்மேற்கு, அரசடித்தீவு விக்னேஸ்வரா அணியினர் ஏறாவூர் இளம்தாரகை கால்பந்து அணியுடன் மோதவுள்ளனர்.

இந்தப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விக்னேஸ்வரா அணியினர் ஏற்கனவே மட்டகளப்பில் பலம்வாய்ந்த டிஸ்கோ, யங்ஸ்டார் மற்றும் ரெட்ணம் அணிகளை வென்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

ஏறாவூர் இளம்தாரகை அணி இக்னேசியஸ் அணியை அரையிறுதில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

முதல் தடவையாக ஏ பிரிவில் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ள விக்னேஸ்வரா அணியின் படத்தை இங்கு காணலாம்.

தொடர்ச்சி...

## ஸ்ரீறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் நடந்தது "நாடு கடத்தலே"

1953 ஆண்டு சனத்தொகை கணிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட இந்திய நாட்டவர்களின் எண்ணிக்கையுடன் அவர்களது இயற்கை அதிகரிப்பு சேர்க்கப்பட்டு, இலங்கை பிரசாவுரிமை பெற்றுக் கொண்டோரையும் நிரந்தரமாக நாட்டைவிட்டு செல்வோரையும் கணக்கில் எடுத்து இந்தியக் கடவுச்சீட்டு உள்ளவர்களையும் கழித்து ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட 975000 என்ற எண்ணிக்கை கணிக்கப்பட்டது. 1964 செப்டெம்பர் 20 ம் திகதி அன்று இலங்கையில் உள்ள இந்திய சனத்தொகை எவ்வாறு கணிக்கப்பட்டது என்பதை விளக்கும் கூற்றை நான் சபாபீடத்தில் சமர்ப்பிக்கின்றேன். 1003269 என்ற எண்ணிக்கையில் இருந்து கடவுச்சீட்டு உள்ளோரின் எண்ணிக்கையை கழித்து மிகுதியான 975000 என்ற எண்ணிக்கையே, கலந்துரையாடலின் விடயப் பொருளாக அமைகிறது.
விரைவில் எதிர்காலம் தீர்மானிக்கப்பட வேண்டிய 150000 பேரைத் தவிர்த்து 525000 பேரும் அவர்களுடைய இயற்கை அதிகரிப்பும் 15 வருடங்களில் கட்டாயமாக தாயகம் அனுப்பப்படவேண்டும். அதே காலப்பகுதியில் 300000 பேருக்கு அவர்களுடைய இயற்கை அதிகரிப்புடன் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டும். பிரசாவுரிமை வழங்குதல் தாயகம் திருப்பி அனுப்பப்படுவோர் விகிதாசாரம் 3: 5.25 (மூன்றுக்கு ஐந்தேகால்) ஆக இருக்கும்.

(சிறிமாவின் அறிக்கை தொடரும்)

இந்தப்பகுதியில் சிறிமா பண்டாரநாயக்கா குறிப்பிடும், பின்வரும் குறிப்பு முக்கியமானது.

//இவ்வொப்பந்தம் இலங்கையில் உள்ள கிட்டத்தட்ட 975000 இந்திய வம்சாவளியினர் தொடர்பானதாகும். சட்டத்திற்கு எதிராக இங்கு குடியிருப்போரும் அனுமதிக் காலத்தின், பின் தங்கியிருப்போரும், இந்திய கடவுச்சீட்டை வைத்திருப்போரும், இந்த எண்ணிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிடினும் திருப்பி அனுப்பப்படவேண்டியவர்களாவர்.// எனும் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் நடந்தது "நாடு கடத்தலே" என்பது தெளிவாகிறது.

( தொடரும் ...)

# தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

## தமிழின் சிறப்பும் ஆரியரின் இன அழிப்பும்

*(மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க மாதாந்த செயற்குழு கூட்டத்தில் நடைபெறுகின்ற தொடர் இலக்கிய சொற்பொழிவின் 3வது உரை.)*

1. மொழி :
முதலில் நாம் பேசும் மொழியான தமிழ் மொழியைப்பற்றி நான் அறிந்தவற்றில் சிலதைக் கூறுகிறேன். உலகில் ஐந்து கண்டங்களிலும் உள்ள பல கோடி மக்களினாலும், பேசப்படுகின்ற மொழிகள் ஏறத்தாள 2000 மொழிகளாம்.

அவற்றுள்: எழுத எழுத்துக்களைப் பெற்றமொழிகள்: 900 க்கு உட்பட்டவையாம். இவற்றுள்ளும்; இலக்கண, இலக்கியச் சிறப்புள்ள மொழிகள் 216 என்றும்,அவற்றுள் :

எந்தமொழிக்கும் இல்லாத சிறப்பு நம் தமிழ் மொழி ஒன்றிற்குமட்டுமே உள்ளது. அதுவுமே ஒன்றல்லப்பல அவை:

1. பழமைச்சிறப்பு
2. இனிமைச்ச்சிறப்பு
3. தனிமைச்சிறப்பு
4. எளிமைச்சிறப்பு
5. வளமைச்சிறப்பு
6. ஒலிச்சிறப்பு
7. சுழிச்சிறப்பு
8. எழுத்துச்சிறப்பு
9. சொற்ச்சிறப்பு
10. பொருட்சிறப்பு
11. நூற்சிறப்பு
12. கவிதைச்சிறப்பு
13. உவமைச்சிறப்பு
14. உருவகச்சிறப்பு
15. இலக்கியச்சிறப்பு
16. இலக்கணச்சிறப்புக்கள்

என 16 சிறப்புக்கள் உள்ளன. இவற்றுள் வளமைச்சிறப்பினை எடுத்துக்கொண்டு இவற்றை விரிக்கிற்பெருகும் இதனடியில் விளக்குவது தமிழின் வளமைச் சிறப்பு ஒன்று மட்டுமே.

இதனைச் சொல்வளம் என்பர் அறிஞர். தமிழில் காணப்படுகின்ற சொல்வளத்தைப் பிறமொழிகள் எவற்றிலும் காண இயலாதாம்.

எடுத்துக்காட்டாக: இலை என்பதையே பார்ப்போம் :- 'இலை' இதை லீஃப் என்பர் ஆங்கிலேயர். பத்திரம் என்பர் வடமொழியார். இதற்குத்தமிழில் உள்ள சொல்வளத்தைப் பாருங்கள்: தமிழில் எல்லா இலைகளையும், இலையென்பதல்ல ஆல், அரசு, அத்தி, வாழை, மா, பலா முதலியவற்றின் இலைகளுக்கு மட்டுமே இலையென்று பெயர் அகத்தி, பசலி, முதலியவற்றின் இலைகளுக்கு பெயர் கீரை. மண்ணிலே படர்கின்ற திராய், கொடி, இலைகளின் பெயர் இலை என்பதல்ல அவற்றின் பெயர் பூண்டு, அறுகு, கோரை, பன் முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் இலையென்பதல்ல அவற்றின் பெயர் புல், நெல் வரகு, கோதுமை முதலியவற்றின் பெயர் இலையென்பதல்ல. அவற்றின் பெயர் தாள். மலைகளிலே வளருகின்ற உசிலை முதலியவற்றின் பெயர் இலையென்பதல்ல. அவற்றின் பெயர் தழை. சப்பாத்தி, தாழை முதலியவற்றின் பெயர் இலையென்பதல்ல அவற்றின் பெயர் மடல். கரும்பு, நாணல் முதலியவற்றின் பெயர் இலை என்பதல்ல, அவற்றின் பெயர் தோகை. தென்னை, பனை முதலியவற்றின் பெயர் இலையென்பதல்ல அவற்றின் பெயர் ஓலை. இவை அனைத்திற்கும் பத்திரம் என்ற வடமொழிச்சொல்லோ, லீஃப் என்ற ஆங்கிலச் சொல்லோ, பொருந்துமா? என்று பாருங்கள் அப்போது தான் தமிழ் மொழியின் சொல்வளம் நன்கு விளங்கும்.

மேலும் பருவம் காட்டும் இச்சொல்வளத்திலும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. இது இலையின் உருவத்தோடு: அதன் பருவத்தையும் சேர்த்துக்காட்டுவதாகும்.

மேலும் நமது வாயசைப்பில் பிறக்கும் சொல்வளத்தையும் பார்ப்போம் அவை:

| | |
|---|---|
| 1. அலறினான் | 24. சிரித்தான் |
| 2. அழுதான் | 25. சீறினான் |
| 3. ஆவென்றான் | 26. சுழித்தான் |
| 4. இளித்தான் | 27. சூடினான் |
| 5. ஈயென்றான் | 28. செய்தான் |
| 6. உறுமினான் | 29. சேயென்றான் |
| 7. ஊளையிட்டான் | 30. சொன்னான் |
| 8. எக்களித்தான் | 31. சோர்ந்தான் |
| 9. ஏழனம் பண்ணினான் | 32. தட்டினான் |
| 10. ஒலித்தான் | 33. தாளமிட்டான் |
| 11. ஓவென்றான் | 34. திட்டினான் |
| 12. ஓதினான் | 35. தீட்டினான் |
| 13. கத்தினான் | 36. படித்தான் |
| 14. காறினான் | 37. பாராட்டினான் |
| 15. கிடுகிடுத்தான் | 38. பிதற்றினான் |
| 16. கீச்சிட்டான் | 39. பேசினான் |
| 17. குசுகுசுவென்றான் | 40. பொழிந்தான் |
| 18. கூவினான் | 41. போதித்தான் |
| 19. கொக்கரித்தான் | 42. வந்தான் |
| 20. கோவென்றான் | 43. வாவென்றான் |
| 21. கௌவினான் | 44. விளக்கினான் |
| 22. சப்பினான் | 45. வீறிட்டான். |
| 23. சாடினான் | |

இவைமட்டுமோ? இன்னும் எத்தனையோ ஆயிரம்? தமிழில் சொல்வளம். அச்சொற்கள் வாயின் அசைவை மட்டுமா காட்டுகின்றன? அசைவின் ஒலியையும், ஒலியின் தரத்தையும், அவன் உள்ளத்தையும் காட்டுகின்றன. இவை அனைத்திற்கும் சப்தித்தான்,கர்ஜித்தான் என்ற வடமொழிச் சொற்கள் பொருந்துமா?

இப்படிப்பட்ட இன்பத் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட நூல்களோ ஏராளம். அவற்றினை செல் அரித்தும், ஆரியர்களினால் தீயிட்டு எரித்தும் ஓடும் ஆற்றில் அள்ளி எறியப்பட்டதுமான நூல்களும் பலவாம் அவ்வாறு அழிந்த நூல்களில்:

1. இரும்பல் காஞ்சி.
2. இசைநூல்



ஆ.மு.சி.வேலழகன்

3. தகடூர்யாத்திரை
4. பன்மணிமாலை
5. பன்னிருபடலம்
6. பாவைப்பாட்டு
7. பாண்டியன் மரபு
8. பாட்டுமடை
9. புணர்ப்பாவை
10. புதையல் ஏடு
11. பெரியபம்மம்
12. பெருவல்லம்
13. போக்கியம்
14. மணியாரம்
15. மதிவாணர் நாடகத் தமிழ் சுவடிமுறுவல்
16. மூப்பெட்கிச் செய்யுள்
17. மூவடிமுப்பது
18. மோதிரப்பாட்டு
19. வச்சத்தொள்ளாயிராம்
20. வஞ்சிப் பாட்டு
21. வாமிப்பியம்
22. விளக்கத்தார் கூத்து
23. நாடகச்சுவடி
24. குலோத்துங்கசோழசரிதை
25. பெருவஞ்சி
26. வீரமாலைஅடிநூல்
27. அவிநந்தமாலை
28. கடகண்டுகணக்கியல்
29. செயற்முறைபதினாறுபடலம்
30. கலியாணகாதை
31. கவிமயக்கிறை
32. களவு ஏடு
33. கலைக்கோட்டுத் தண்டு
34. காலகேசி
35. காக்கைப் பாட்டினியம்
36. கணச்சுவடி
37. கோள் நூல்
38. அணியியல்
39. அநவியம்
40. ஆசிரியமுறி
41. ஓவியச்சுவடி
42. ஐந்திறம்
43. சங்கயாப்பு
44. சயந்தம்

எனப்பலவாம். இதனாலே புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்:

செங்கதிரை நாளிகைகள் மேற்கே தள்ளும்

செயல் போலே ஆரியர்கள் தமிழர் வாழ்வில்

பொங்குதமிழ் கலைச் செல்வம் மறையும் வண்ணம்

புனைசுருட்டிச் செய்து வந்தார் ஐயகோ நம்
மங்காததமிழ் மறவர் வரலாறெல்லாம்
மங்கும் வகை செய்தார்கள் வையம்கண்ட
தங்கத்தை இரும் பென்று
சொன்னார் காண்!

ஆம்! அந்தவகையில் ஆரியர்கள் நமது நூல்களையும் அழித்து, சிந்துவெளி போன்ற நகரங்களையும், அந்நகரங்களில் வாழ்ந்த பல இலட்சம் மக்களையும் அழித்தது போதாமல் 'வருணம்' என்றோர் முறையினையும் வகுத்து வேதியன், சத்திரியன், வணிகன், சூத்திரன் எனப் பிரித்து நம்மை நான்காவது சூத்திரராக்கி, இந்தச்சூத்திரர்கள் எதையும் செய்ய முடியாத நாதியற்ற அடிமைகள், ஒரு நாட்டையே எக்காலத்திலும் ஆள முடியாதவர்கள் என்று பொருள்படக்கூறிய ஆரியர்களுக்கு ஔவையார் அவர்கள்

'நூலெனிலே கோல்சாயும்
நுந்தமரேல் வெண்சமராம்
கோலெனிலே ஆங்கே குடிசாயும்
நாலாவான் மந்திரியுமாவான்
வழிக்கும் துணையாவான்
அந்த அரசே அரசு' என்றார்.

அதாவது: வேதியன் நாடாண்டால், அவர் சார்ந்த சமயத்தாருக்கு மட்டுமே, உரிமையும், சலுகையும் செய்வான். ஏனைய சமயம் சார்ந்தோர் புறந்தள்ளப்படுவார்கள். இந்நிலைதான் இன்று ஆசிய நாடுகளில் நடைபெறுகின்றன!. அதனால், வேதியருடைய ஆட்சி நிலைக்காது. சத்திரியரான அரசர்கள் நாடாண்டால், அண்டை நாட்டு அரசனிடம் கப்பம் கேட்பான், மறுத்தால் போருக்கு அழைப்பான், அழைத்து அந்த அரசனும் இந்த அரசனும் போராடுவதன் மூலம்; நாட்டு மக்கள் வீண்போரினால் அழிவர். அதனால் சத்திரியன் ஆட்சியும் நிலைக்காது. வணிகன் நாடாண்டால் அளவை, நிறுவைகளில் நேர்மையின்மையினாலும் கொள்ளை இலாபம், கலப்படம் போன்றவைகளினாலும் வணிகனின் ஆட்சியும் நிலைக்காது.

நாலாவானான சூத்திரன் மந்திரியுமாவான் வழிக்கும் துணையாவான். ஆம்! பாட்டாளியான நாலாவான் அவனது பட்டறிவைக்கொண்டே நாட்டையும் நல்ல முறையில் ஆள்வதோடு: நலிவுற்றவர்களுக்கும் கைகொடுத்து சமத்துவம் சமதர்மம் என்பன நிலைக்க செய்வான். அந்த அரசே தான் என்றோ ஒருநாள் மலரப்போகும் 'பொதுவுடமை' என்று பதிலளித்தாள் ஔவை.

(தொடரும்)

## கல்விக் கூட்டுறவுச் சங்க மட்டக்களப்புக் கிளையில் இலக்கிய ஒன்றுகூடல்



கடந்த 11.09.2018இல் கல்விக் கூட்டுறவுச் சங்க மட்டக்களப்புக் கிளையில் (கோவிந்தன் வீதி) அதன் உதவிப் பொது முகாமையாளர் திரு.த.பிரதீஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. உத்தியோகத்தர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் விதத்தில் இந்த ஒன்றுகூடல் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இதிலே வலய முகாமையாளர் திருமதி சு.ஜீவகாந் அவர்களும் நிருவாக உத்தியோகத்தர் திரு.சி.சுரேந்தர் அவர்களும் இலக்கிய ஒன்றுகூடலின் தேவையை எடுத்துக் கூறினார்கள்.

இதில் சிறப்புச் சொற்பொழிவாளராக திரு.த.யுவராஜன் (உ.க.ப தமிழ்) அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்

கலந்துகொண்ட ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக
மட்டக்களப்பு தமிழ்ச்
சங்கத்தின் சார்பில், அதன் தலைவர்,
புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின்
சமர்ப்பணம் இந்தப் பக்கம்.



# நமது மரபிலிருந்து நமக்கான நவீனம்

## கண்ணகி கலை இலக்கிய விழாவில் ஓவியை றினுஜாவின் ஓவியங்கள்

அரங்க ஆய்வுகூடம் 2012 இல் ஓர் ஓவியக் கண்காட்சி வைத்தது
அதில் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் அப்போது ஓவியம் பயின்று கொண்டிருந்த மாணவர்களான ரமணன், றினுஜா ஆகியோரின் ஓவியங்களையும் சிற்பங்களையும் காட்சிக்கு வைத்தோம். அன்றைய விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகப்பணிப்பாளர் கலாநிதி பிரேம்குமார் அதனைத் திறந்து வைத்து உரையாற்றினார். அவ்வோவியர்கள் இருவரும் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் பின்னர் தற்காலிக உதவி விரிவுரையாளர்கள் ஆனார்கள். அவர்களின் ஓவியப்பணி தொடர்ந்தது, அங்கு சில ஓவியக்கண்காட்சிகளும் வைத்தனர். பின்னால் அவர்கள் அங்கு நிரந்தர விரிவுரையாளர்களுமானார்கள்

றினுஜா களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்தவர்,ரமணன் செட்டிபாளையத்தைச் சேர்ந்தவர்.

அண்மையில் களுதாவளையில் நடைபெற்ற கண்ணகி கலை இலக்கிய விழாவில் கண்ணகியம்மன் சம்பந்தமான ஓர் ஓவியகண்காட்சியும் இடம் பெற்றது. அங்கு இந்த றினுஜாவின் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்தோடு ஓவியர் குலராஜின் ஓவியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. குலராஜின் ஓவியங்களில் கலங்காரி பாணியில் கண்ணகி அம்மன் கதைகள் கீறப்பட்டுத் தொங்க விடப்பட்டிருந்தன.

கலங்காரி பாணி பேர்சியாவில் இருந்து இந்தியா வந்து மொஹலாயர் ஆட்சியில் பரவிய ஓர் ஓவிய பாணியாகும். ஓவியர் குலராஜ் அப்பாணியிலும் தேர்ச்சி பெற்றவர். இவரின் நன் மாணாக்கருள் ஒருவர் தினுஜா குருநாதரைப் பின்பற்றியும் தன் சுய போக்கிலும் சில ஓவியங்களை வரைந்திருந்தார். தினுஜா கண்ணகி அம்மனோடு சார்ந்த பல கதைகள் கழுதாவளை மக்களின் பண்பாடுகள் என்பன குறியீட்டு வடிவில் அவர் ஓவியங்களில் வெளிப்பட்டிருந்தன. பலகாரங்களை அலங்காரமாக செய்து கண்ணகிக்குப் படைத்தல் கழுதாவளை மரபு.



இளம் தென்னைக் குரும்பைகளை அவளது மார்பகமாக்கினர். வேப்பம் இலைகளை அவளது நீண்ட பாவாடையாக்கினர்.

இங்கு இயற்கையே அன்னையாகக் காட்சி தருகிறது. பிரகிருதி என்பது நிலம்.

நிலம் எனும் பிரகிருதியில் முளைத்தெழுந்த வளம் தரும் இலை கொடி செடி மரங்கள் அவைதரும் கனிகள் என்பன இங்கு தெய்வ உருக்கொள்கிறது.

இதிலிருந்துதான் உருவ வணக்கம் ஆரம்பிக்கிறது. இதிலிருந்துதான் சக்தியை மையம் கொண்ட தாந்த்ரீகக் கோட்பாடு உருவாகிறது. இதுவே பண்டைத்தமிழரின் வழிபாடு தெய்வ வணக்கம் தத்துவம் என்று கூறுவோரும் உண்டு. இதனை நாம் மட்டக்களப்பில் இன்றும் காணுகிறோம்

ஏன் அதனை செய்கிறோம் என்ற வரலாற்று உணர்வின்றி அதனை அழகாச் செய்து காட்சிக்கு வைப்பர் மட்டக்களப்பு கோவில் பூசாரிமார்.

இது பிராமணர் ஆகமக் கோவில்களில் செய்யும் சாத்துப்படியை நிகர்த்தது.
இதனை தன் ஓவியங்களில் குறியீடுகளாக பயன்படுத்துகிறார் றினுஜா

அவர் கையாளும் வர்ணங்கள் கடுமை நிறமானவை, மட்டக்களப்புக் கோவில் பண்பாடு கடுமை நிறம் சார்ந்தது, கடும் மஞ்சள், கடும்பச்சை, கடும் சிவப்பு கடும்காவி நிறங்கள் மக்களுக்கு இங்கு பழகிப்போன நிறங்கள்.

ஐரோப்பிய நவீன ஓவிய மரபில் வந்தவர்களுக்கு இது வினோதமாக இருக்கக்கூடும். வேறு அனுபவமும் தரக்கூடும். இந்திய நவீன ஓவியர்கள் மிக அதிகமானோர் தமது மரபினடியாக நவீன ஓவியம் வரைவோரே. ஓவியர் குலராஜும் இதனையே கூறுவார்,

நமது மரபினடியாக நமக்கென ஓர் நவீனத்தை நாம் கண்டடைவோம் என்பார் அவர்றினுஜாவிடம் அக்கோட்பாடு ஆளப்புதைந்து கிடப்பது போல தோன்றுகிறது

இன்றைய எமது நவீன ஓவியர்கள் பலரின் நவீன ஓவியங்கள் பல நமக்குப் புரியாதனவாக இருக்கின்றன, விளக்கம் கூறி விரிவுரை நிகழ்த்திப் புரிய வைக்கப்படாது பாடுபடுகிறார்கள் நம் ஓவியர்கள் சிலர். இங்கு வந்த மக்களை அவதானித்தேன்,
அவர்கள் றினுஜாவின் ஓவியங்களை ரசித்தனர், அவர்களுடன் அளவளாவினேன்,

அவர்கள் ஓவிய விற்பன்னர்கள் அல்லர் ஆனால் அந்த ஓவியங்கள் கூறுபவை தமக்குப் பரீச்சயமானது என்றனர். தமக்கு

தேட்டம்

அச்செய்தி புரிகின்றது என்றனர்.

தம்மூர்ப்பலகாரங்கள் அங்கு ஓவிய வடிவில் தொங்கியமை அவர்களுக்கு ஆச்சரியத்துடன் ஆனந்தத்தையும் அளித்தது. றினுஜா தன்கை நேர்த்தியில் இன்னும் சிறிது கவனம் செலுத்த வேண்டும் போல எனக்குப்பட்டது,சித்திரமும் கைப்பழக்கம் அல்லவா?ஒரு குக்கிராமத்துக்குள் நடந்த கிராமிய மக்களையே பார்வையாளராகக் கொண்ட இந்த ஓவியக்கண்காட்சி மரபிலிருந்து நமக்கான நவீனம் பெரிய நிறுவனங்களிலிருந்தல்ல கிராமத்திலிருந்து உருவாவதையே எனக்கு உணர்த்தியது "இவ்வோவியங்களுக்கு எனக்கு பெரிய வரவேற்பில்லை சேர்"

என துயரத்தோடு என்னிடம் றினுஜா கூறினாள். நான் அவளிடம்

“நீங்கள் யாரின் வரவேற்பைக் கோருகிறீர்கள்? இதோ உங்கள் மக்கள் வெகுவாக வரவேற்கிறார்களே” என்று பதில் கூறினேன். அத்தோடு "வரைவதுவே உமது வேலை வரைந்து கொண்டேயிருங்கள் அதில் படைப்பு இன்பம் காணுங்கள் அதில் வரும் மகிழ்ச்சியை அனுபவித்தபடி வாழுங்கள் யாரின் பாராட்டையும் புகழுரைகளையும் எதிர்பார்க்காதீர்கள் ஏனெனில் நீங்கள் ஓர் ஓவியக் கலைஞி அந்தக் கர்வத்தோடு வாழுங்கள்"

எனக்கூறி விட்டுக் காட்சிக்கூடத்தைவிட்டு வெளியே வந்தேன்
றினுஜாவினதும் குலராஜினதும் .கண்ணகி ஓவியங்கள் நீண்ட நேரம் மனதில் உணர்வலைகளை எழுப்பியபடியே இருந்தன.

மலைகளைப் பேசவிடுங்கள்

## ஸ்ரீறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் நடந்தது “நாடு கடத்தலே”

*(சிறிமாவின் அறிக்கை தொடர்கின்றது...)*

எதிர் கட்சி தலைவருடன் கலந்தாலோசனை

‘இந்தியப் பிரச்சினையானது கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று கையாண்டு தீர்க்கப்படவேண்டிய தீவிரமான தேசிய முக்கித்துவம் வாய்ந்ததொன்றாகும் என்று நான் எப்போதும் கூறுகின்றேன். இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து காலத்திற்கு காலம் இப்பிரச்சினையோடு மிக நெருக்கமாகத் தொடர்புப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்கவுடன் பல தடவை நான் இதுவிடயம் குறித்து கலந்துரையாடியுள்ளேன். இந்த விடயம் தொடர்பாக நான் அவருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது அவர் காட்டிய ஒத்துழைப்பிற்காக நான் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் நாட்டை விட்டு புறப்பட்டு செல்வதற்கு முன்னர் இந்தப் பேச்சுவார்த்தையில் இலங்கை நாடு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இந்த நாட்டின் பிரசையாக நாம் ஏற்றுக்கொள்ள கொள்ளக்கூடிய, இந்திய வம்சாவளியினரின் எண்ணிக்கையை தீர்மானிப்பதில் நாம் ஓர் உடன்பாட்டை எட்டியிருந்தோம். இந்தக் குழுவில் டட்லி சேனநாயக்கவை கலந்து கொள்ளுமாறு நான் அழைப்புவிடுத்தேன். அதை அவர் ஏற்றுக்கொண்டார். ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளது தலைவர்களதும் ஒத்துழைப்பினை நான் கோரியிருந்தேன்.

ஒக்டோபரில் நான் நாட்டைவிட்டு புறப்படும் முன் இப்பிரச்சினை தொடர்பாக அவர்களின் கருத்துகளை பெறுமுகமாக என்னைச் சந்திக்குமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தேன். அவர்களில் அனேகமானோரை சந்தித்து கலந்து உரையாடும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் அனைவரும் இந்தியாவுக்கே திருப்பி அனுப்பப்படவேண்டும் என்பது முதல் அவர்கள் அனைவருக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது வரையில் அவர்களது கருத்துகள் பலதரப்பட்டதாக அமைந்திருந்தன. பொருளாதார ரீதியாக இலங்கையில் வைத்து பராமரிக்கக் கூடியவர்களை வைத்துக்கொண்டு ஏனைய



அனைவரையும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி விட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. எனது அமைச்சானது “உடரட்ட ஜாதிக்க பெரமுனவுடன்” (மலைநாட்டு தேசிய முன்னணி) இது தொடர்பாக கலந்தாலோசித்து அவர்களது கருத்துகள் புது டெல்லியில் நான் மேற்கொண்ட நிலைப்பாட்டிற்கு அமைவானதாய் இருந்தது என்பதை நான் அறிவேன்.

புதுடில்லி பேச்சுவார்த்தை

புதுடில்லியில் இந்திய பிரதமரோடு ஒக்டோபர் 24 ஆம் திகதி ஆரம்பித்த எனது பேச்சுவார்த்தை ஆறு முழுநாட்கள் நீடித்தது. இந்திய பிரதம மந்திரி லால் பகதூர் சாஸ்திரிக்கும், அவருடன் பேச்சுக்களின் போது இணைந்து கொண்ட ஏனைய அமைச்சர்களுக்கும், எந்த நேரத்திலும் அல்லது பிந்திய இரவிலும் சில வேளைகளில் காலையில் குறுகிய நேரங்களிலும் எமது தூதுக்குழுவை சந்திக்க விருப்பம் தெரிவித்து குறுகிய ஆறு நாட்களுக்குள் இப்பேச்சுவார்த்தையை பூர்த்தி செய்ய உதவிய இந்திய அதிகாரிகளுக்கும் நான் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரு அரசாங்கங்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கௌரவ செனட்டர்கள் படித்திருப்பார்கள். அதன் முக்கிய அம்சங்கள் குறித்து சுருக்கமாக நான் கருத்துரைக்கிறேன். ‘

இலங்கையில் உள்ள எல்லா இந்திய வம்சாவளியினதும் எதிர்காலமும் நிலையும் இந்த ஒப்பந்தம் மூலம் இறுதியாக தீர்மானிக்கப்படவுள்ளது. இம்மக்களுள் 150000 ஆட்கள் குறித்து தீர்மானமொன்று எட்டப்படவில்லை. அவர்களுடைய நிலையும் விரைவில் தீர்மானிக்கப்படும்.
இவ்வொப்பந்தம் இலங்கையில் உள்ள கிட்டத்தட்ட 975000 இந்திய வம்சாவளியினர் தொடர்பானதாகும். சட்டத்திற்கு எதிராக இங்கு குடியிருப்போரும் அனுமதிக் காலத்தின், பின் தங்கியிருப்போரும், இந்திய கடவுச்சீட்டை வைத்திருப்போரும், இந்த எண்ணிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிடினும் திருப்பி அனுப்பப்படவேண்டியவர்களாவர்.

தொடர்ச்சி... (பக்கம் -11 )

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 4

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

கம்பராமாயணம் குகப்படலத்தில் உள்ள செய்யுள்களில் எட்டுச் செய்யுள்கள், குறித்த பாடப் பகுதியில் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு செய்யுள் வருமாறு.

அறம்தானே என்கின்ற அயல் நின்றாள்தனை
  நோக்கி ஐய அன்பின்
நிறைந்தாளை உரைஎன்ன நெறி திறம்பாத்
  தன்மெய்யை நிற்பது ஆக்கி
இறந்தான் தன் இளந்தேவி யாவர்க்கும்
  தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன்என்னப் பிரியாதான் தனைப்
  பயந்த பெரியாள் என்றான்

இச்செய்யுளை உள்ளபடி வாசித்த பின்னர் பின்வருமாறு வகைப்படுத்தி வாசித்துப் பாருங்கள்.

1. அறம்தானே என்கின்ற அயல் நின்றாள்தனை நோக்கி
2. ஐய, அன்பின் நிறைந்தாளை உரைஎன்ன
3. (i) நெறி திறம்பாத் தன்மெய்யை நிற்பது ஆக்கி இறந்தான் தன் இளந்தேவி
   (ii) யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன் பின்பு பிறந்தானும் உளன்என்னப் பிரியாதான் தனைப் பயந்த பெரியாள்
4. என்றான்.

இச்செய்யுளில் இலக்குவனின் சிறப்பு,

---

- எல்லோரும் வணங்கத் தக்கவனானவன் இராமன். அந்த இராமனின் பின் பிறந்தவர்களுள் தம்பி என்று சொல்லத்தக்க பெருமைக்குரியவன்.

இச்செய்யுளில் பரதனின் சிறப்பு,

---

- தானும் இராமனின் தம்பியர்களுள் ஒருவன். அப்படியிருந்தும் தன்னைப் பெருமைப்படுத்தாமல் - முதன்மைப்படுத்தாமல் உரியவனின் (இலக்குவனின்) பெருமை பேசுபவனாயிருக்கின்றமை.

இச்செய்யுளில் தசரதனின் சிறப்பு,

---

- முறை தவறாது, தன் வாய்மையை என்றும் நிலைத்திருக்கச் செய்தவன்.

இச்செய்யுளில் சுமித்திரையின் சிறப்பு,

---

- 'தர்மமே' என்று சொல்லத்தக்கவளாய் இருக்கின்றமை.
- முறை தவறாது, தன் வாய்மையை என்றும் நிலைத்திருக்கச் செய்தவனான தசரதனின் மனைவி.
- சிறப்புக்குரிய இலக்குவனைப் பெற்ற பெருமைக்குரியவள்.

இவ்வாறு செய்யுள்களைப் பொருத்தமான முறையில் வகுத்து நோக்கும் போது வினாக்களுக்கு விடையளிப்பது சுலபமாக இருக்கும். சில வினாக்களை உருவாக்குவோம்.

1. 'அறந்தானே என்கின்ற அயல் நின்றாள்' என்று கூறுபவன் யார்?
2. குகனின் கூற்றைத் தருக.
3. தசரதனைச் சிறப்பிக்கும் கூற்று எது?
4. பரதனின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.
5. சுமித்திரையின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.
6. தசரதன் சிறப்பிக்கப்படுமாற்றைச் சுருக்கமாக விளக்குக.
7. இலக்குவனின் சிறப்பு எடுத்துக்காட்டப்படுமாற்றை விளக்குக.
8. 'தொழுகுலமாம் இராமன்' - இதன் பொருளை எழுதுக.
9. அறம், நெறி, திறம்புதல், பயந்த - இவற்றின் பொருளைத் தருக.

இப்பகுதியில் எத்தகைய விடயங்களை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் வினாக்களையும் மாணவர்கள் அரங்கம் பத்திரிகைக்கு அனுப்பிவைக்கலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். தாமதிக்காதீர்கள். க.பொ.த.(சா.த) பரீட்சை நெருங்குகிறது.

பக்க அனுசரணை




# கற்போம்

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

இலங்கையின் வரலாற்றுத் தரவுகள்

---

- ஆதிக் குடிகள் : இயக்கர், நாகர்
- வரலாற்றைக் கூறும் நூல்கள் : மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம்
- இலங்கையின் பூர்வீக மாகாணங்கள் : ரஜரட்ட, மாயரட்ட, றுகுணுரட்ட

இலங்கைக்கு அன்னியர்களால் வழங்கப்பட்ட மறுபெயர்கள்

---

| | | | |
|---|---|---|---|
| ஆரியர் | - தம்பபண்னி | சீனர் | - சீலன் |
| அரேபியர் | - செரண்டிப் | போர்த்துக்கேயர் | - செயிலான் |
| கிரேக்கர் | - தப்ரபேன் | ஒல்லாந்தர் | - சிலான் |
| இந்தியர் | - சீலயி | ஆங்கிலேயர் | - சிலோன் |

-- இலங்கையைதரிசித்த முதல் ஐரோப்பியர் - மார்க்கோ போலோ
-- இலங்கையைதரிசித்த முதல் அரேபியர் - இபின்பதுாதா(மொரோகோ)
-- இலங்கையைதரிசித்த முதல் சீனர் - பாஹியன்

இலங்கையில் நிறுவப்பட்டவை

---

-- இராணுவம் : 06.08.1949
-- கடற்படை : 09.12.1950
-- பொலிஸ் சேவை.்.திணைக்களம் : 03.09.1866
-- புகையிரத சேவை : 27.12.1864
-- விமான சேவை : 1979
-- உள்;ர் விமானசேவை : 1947
-- ரூபவாகினி கூட்டுத்தாபனம் : 1982
-- ஒலிபரப்பு சேவை : 1925
-- ஸ்ரீலங்கா துறைமுக அதிகாரசபை : 1979
-- தேசிய அடையாள அட்டை : 1972 (ஆட்பதிவு திணைக்களம்)
-- இலங்கை போக்குவரத்துசபை : 1958
-- தொலைத்தொடர்பு : 1982

பெருந்தோட்ட விவசாயம்

---

-- தேயிலை : 1839 கலாநிதி கிணேசர்
-- தேயிலை : ஜேம்ஸ் ரெயிலர்
-- கோப்பி : 1823 எட்வேட் பாண்ஸ்
-- இறப்பர் : 1876 ஆங்கிலேயர் (பிரேசில் நாட்டிலிருந்து)

இலங்கையின் அரசியல் தகவல்கள்

---

-- இலங்கையை ஆட்சி செய்த அன்னியர்கள் (ஐரோப்பியர்)
-- போர்த்துக்கேயர் - (1505 - 1658) – 153 ஆண்டுகள்
-- ஒல்லாந்தர் - (1658 - 1796) – 148 ஆண்டுகள்
-- பிரித்தானியர் - (1796 - 1948) – 152 ஆண்டுகள்
-- இரட்டை ஆட்சி - 1798–1802(ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியும், பிரித்தானிய அரசும் இணைந்து மேற்கொண்ட ஆட்சி)
-- இலங்கையின் அரசியல் யாப்புக்கள் - சுதந்திரத்திற்கு முன்னர்
-- கோல்புறூக் கமறூன் அரசியல் சீர்திருத்தம் - 1833
-- குருமக்கலம் மானிங், சீர்திருத்தம் - 1921, 1924
-- டொனமூர் அரசியல் யாப்பு - 1931
-- சோல்பரி அரசியல் யாப்பு (சோல்பரி பிரபு) - 1947
சுதந்திரத்திற்கு பின்னர்
-- முதலாம் குடியரசு அரசியல் யாப்பு - 1972 ஆயல 22
(உருவாக்கியவர். கலாநிதி கொல்வின் R.D சில்வா)
-- இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு - 1978 Sep 8
(உருவாக்கியவர்.H.Wஜெயவாத்தன)

-- மக்கள் பிரதிநிதிகள் கூடும் இடம் - பாராளுமன்றம்.
பிரதிநிதிகள் - 225 பேர்.
(தேர்தல் மூலம் 196 பேர் + தேசியப்பட்டியல் மூலம் 29 பேர்)

நீதித் துறை - துரனஉைையசல
-- உச்ச நீதிமன்றம் - Supreme Court
-- மேன்முறையீட்டு நிதிமன்றம் - Court of Appeal
-- உயர் நீதிமன்றம் - High Courts
-- மாவட்ட நீதிமன்றம் - னுளைவசஉைவ ஊழரசவள
-- நீதவான் நீதிமன்றம் - ஆயபளைவசயவந“ள ஊழரசவள



தொடர்ச்சி...

# சீதையின் சீத்துவம் – தொடர்ச்சி 2



செயற்கரிய செயலை வெகுவாக பாராட்டி இலங்கை வேந்தன் இறப்பிற்கு தன் மகிழ்ச்சியயையும், இன்பத்தையும் இராமன்பால் அனுமன்பால் காட்டியிருக்க வேண்டும். அதுவல்லாமல் இராவணன் மட்டும் குற்றவாளியல்ல அதன் முடிவுக்குக் காரணமாயிருந்த நாம் மூவரும் (இராமன், சீதை, அனுமன்) குற்றவாளிகளே என்று சீதை அனுமனிடம் எதிர்வாதம் செய்வாளேயானால் இராவணன் அழிவை அவள் விரும்பவில்லை என்றுதானே பொருள் !

தன் கணவன் வெற்றிக்கு மகிழ வேண்டிய அவள், ஏன் இராவணன் இறப்புக்காக குறிப்பாக வருந்த வேண்டும் அதிலேதான் சீதையின் அந்தரங்கமான உள்ளக் கிடக்கை அடங்கி இருக்கிறது. மேலும் இராமன், அனுமன், சீதை, ஆகியோர்கள் எவ்வாறு குற்றவாளிகள் என்பதற்குரிய காரணங்களையும் சீதை அனுமனுக்கு விளக்கிக் கூறுகிறாள்.

"அனுமனே நான் கூறுவதைக் கவனமாக கேட்பாயாக நீங்கள் இராவணனைச் சேர்ந்தோரிடம் பகைமை கொள்ள காரணமே இல்லை. அது நியாயமும் இல்லை. இத்துன்பங்கள் யாவற்றிற்கும் காரணம் என் முன் கருமங்களேயாம். இவனும், இவனைச் சார்ந்தோர்களும் நற்குணமிக்கவர்கள் எப்படிப்பட்ட அபாரதங்களை இவர்கள் செய்யினும் நாம் அதை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இதற்கு சான்றாக ஒரு கதை கூறுகின்றேன் கேள்" என்று இவ்வாறு அனுமன் முன் சீதை பேசத்தொடங்கி அவள் கூற விரும்புகின்ற கதையினையும் அனுமனிடம் கூறுகிறாள். (அக் கதையை எழுதின் கட்டுரை மிக நீண்டுவிடும் அதனால் அக்கதையை எழுதமுடியவில்லை. இராமாயணம் யுத்தகாண்டம் இறுதி சுருக்கத்தில் இருக்கிறது விரும்பின் பார்க்கலாம். அக்கதை ஒரு வேடன், ஒரு கரடி ஒரு புலி ஆகியவைகளைப் பற்றியது.)
அனுமன் எவ்வாறு குற்றவாளியானான் என்பதை சீதை முதற்கண் நிருபிக்க விரும்புகிறாள். அவள் அனுமனை நோக்கி "நீ சுக்ரீவனுடைய சேவகனாகையால் நான் இருக்கும் இடத்தைத் தேடிச் செல்ல வேண்டும் என்பதே அவன் உனக்கிட்ட கட்டளையாகும். நீ அவன் சொன்னதை மட்டும் செய்திருக்க வேண்டுமேயல்லாது அதற்கு மேல் போயிருக்கக் கூடாது. காரணம் நீ அவனுடைய சேவகன் இலங்கைக்கு "தீ" வைக்கவும். அசோக வனத்தை அழிக்கவும் அவன் உனக்கு ஆணை இட்டிருந்தான்? அத்துமீறி இத் தகாத செயலைச் செய்த நீ ஒரு குற்றவாளியல்லவா? எனவே உன்னை முதலில் தண்டிக்க வேண்டும்."

இரண்டாவதாக இராமன் எவ்வாறு குற்றவாளி என்பதைக் கூறுகிறாள். சீதை "உலகில் கணவன் மனைவியைக் காப்பாற்றுவதும்; ஆதரிப்பதும் அவனுடைய பிரதான கடமைகளாகும். விவேகம் இல்லாத மிருகங்கள் கூட தன் குட்டிகளைக் கண் போலக் காப்பாற்றுகின்றன.

ஒருவன் எவ்வளவுதான் அற்பமாய் இருந்தாலும் தன் மனைவிக்குப் பிறன் செய்த அவமானத்தைப் பொறுப் பானா ? இராமன் ஒரு சத்திரியன், வீரன் இச்வாகு வம்சத்தினன். அத்தகையவன், இராவணன் என்னைத் தொட்டு தூக்கி சென்று பல மாதங்களாக தன்னிடமே வைத்துக் கொள்ள அனுமதித்தாரே, இதுவா தர்மம்? எனவே இராமானும் குற்றவாளியே, ஆகவே அவரும் தண்டனைக்குரியவர்தான்.

மூன்றாவதாக தன்னையும் ஒரு குற்றவாளியெனக் கூறி அதற்குரிய காரணத்தைக் கூறுகிறாள். "நானோ பெண்; சத்திரியன் மனைவி கூட! மற்ற புருஷனை மனதிலும் நினைக்கக்கூடாது. அப்படியானால் இராவணன் என்னைத் தொட்டு எடுத்து தன்னுடல் மேல் வைத்து தன் இடம் கொண்டு சென்றதால் நானும் நியாயப்படி உயிர் விட வேண்டியவள்தான். எனவே நாம் மூவரும் இவ்வகையிலே குற்றவாளிகளாகி தண்டனைக்குரியவர்களாகிறோம்." என்று சீதை அனுமனிடம் தன் கருத்துகளைக் கூறி முடித்தாள்.

இராவணனைச் சீதை உண்மையிலேயே வெறுத்து இராமன் செயலைப் பாராட்டி இராவணன் அழிவிற்கு மகிழ்வளாயிருந்தால் இராவணன் குற்றவாளியல்ல என்று நிருபிக்க சீதை முயலவேண்டிய அவசியம் என்ன? எனவே சீதை இராவணனை அறவே வெறுத்தொதுக்காது, அவனுக்கும் தன்னிதயத்தில் என்றும் அழியாத ஓரிடத்தை ஒதுக்கியிருந்தாள் எனத் தெரியவருகிறது! (வால்மீகி இராமாயணம் யுத்தக்காண்டம்) இதற்குச் சார்பாக மற்றொரு சான்று.

(தொடரும்...)

# குறுக்கெழுத்துப் போட்டி இல:-11 இன் விடைகள்

அரங்கம் இரா. தவராஜா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வ | ண | க் | 2 க | 3 ம் | ■ | 4 சி |
| ந் | ■ | ■ | ச | ப | த | ம் |
| 6 தா | ல் | 7 த | க் | கு | ■ | ம் |
| மூ | ■ | 8 ங் | கு | ம் | 9 கு | ம |
| 10 று | ல் | கு | த | ■ | டி | ■ |
| லை | ■ | 11 த | ல் | 12 லி | ■ | 13 கா |
| ■ | 14 பா | ல் | ■ | 15 பு | த | ன் |

சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலி:~

பெசபமாடல (அமிர்தகளி)

-- இவருக்குரிய பரிசுப் பணம் அனுப்பிவைக்கப்படும்.
-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.

தொடர்ச்சி...

# அப்பத்தின் விலையும் அதிகரிப்பு



சபையும் விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்கியுள்ளது.
இந்த விடயத்தில் வாடிக்கையாளர்களின் சிரமத்தை கருத்தில் கொள்ள அது தவறிவிட்டதாக உணவுவிடுதி உரிமையாளர்கள் கூறுகிறார்கள்.

தேநீர், சாப்பாட்டுப் பார்சல் ஆகியவற்றின் விலையும் அதிகரிக்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

தொடர்ச்சி...

# மட்டக்களப்பு மாநகரசபையின் 03 வது பௌர்ணமி கலை விழா



இதன் போது மட்டக்களப்பில் பாரம்பரியக் கலைநிகழ்வுகள் மற்றும் நாடகங்கள், கதை நிகழ்வுகள், பல்வேறு கலாச்சாரக் கட்டமைப்புகளைக் கொண்ட நிகழ்வுகள் எனப் பல்வேறு அம்சங்களிலான நிகழ்வுகள் இங்கு அரங்கேற்றப்பட்டன.

மட்டக்களப்பு மாநகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் 03வது பௌர்ணமி கலை நிகழ்வு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

# வடபுலத்துப் பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார் ....31

உடலை தாறுமாறாகிழிச்சு அனுப்பிப் போடுவாங்கள். அதையும் வீட்டை குடுக்க மாட்டாங்கள். எப்பிடியோ மட்டக்களப்பால உடல் வரயில்ல. சேதிமட்டுந்தான் வந்தது. ஒரு செத்தவீட்டுப்பிளானில் எல்லாம் நடத்திச்சினம். அவனுக்கு துயிலுமில்லத்திலும் இடமில்ல.

இதில விசேசமென்னண்டா அந்த ரீச்சர் தாலியக்கழட்டவுமில்லை நெத்தியில நிறைஞ்ச குங்குமத்த கைவிடவுமில்லை. குங்குமப் பொட்டோடதான் பள்ளிக்கூடம் போறா வாறா. பின்ன இவவ முன்னபின்ன தெரியாதவை இவவிட புரியன் எங்கயோ இருக்கிறதாத்தான் நினைச்சினம். இருந்தாலும் கூட வேலய்யிற வாத்தி ஒருத்தன் சும்மா கிடக்கமாட்டாம கேட்டும் விட்டான்.
' ஏனக்கா நீ தாலியும் பொட்டுமா திரியிறா' எண்டு. அவள் ஒரு சிமிட்டுக்க சொன்னாள் 'அது ரிசேவில இருக்கு. இன்னொண்டுக்கு இடம் வைக்கிறதில்லை. வெறுஞ்சுவரெண்டாத்தானே ஆரும் எழுதலாம்.' எண்டாளே பாக்கலாம்.

இதுக்குள்ள இவ்வளவு இருக்கோ எண்டு கேளாதையுங்கோ....அடுத்து வந்த ஒவ்வொரு வீரச்சாவுகளிலயும் பொம்புளையள் தாலியக்கழட்டவுமில்லை பொட்டை வைக்க மறக்கவுமில்லை இனி மட்டக்களப்பார் இப்ப எப்பிடீயோ?

தொடர்ச்சி...

# கட்டிளமைப் பருவ உளநலம்

அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்யவும். மறுதலையாக பயனாளி தெரிவிக்கும் விடயங்களை நீங்கள் உள்வாங்கி, அவை உங்களது பிரச்சனைகளாக எடுத்துக்கொள்வதை தவிர்த்து விடவே வேண்டும். அல்லாது விடின் பயனாளியின் பிரச்சினைகள் உங்களிற்கு அதிக நெருக்கீட்டையும் மனச்சுமைகளையும் உங்கள் வேலைகளில் ஏற்படுத்தலாம்.

உடல்மொழி திறன்கள்

---

பயனாளியுடன் தொடர்புகொள்வதற்கு உடலசைவுகள், உடல்மொழிகள் போன்ற திறன்களையும் பயன்படுத்த முடியும். இதுவும் பயனாளியுடனான தொடர்பாடல் முறையாக அமைகிறது. இவற்றில் பொருத்தமான கண் தொடர்பாடல், தலையசைவுகள், சரியான இருக்கை (சரியான இடைவெளி, முன்சாய்திருத்தல், கால்கள் ஒடுக்கமாக அமைவது, கைகள் தொடைக்கு மேல், முகத்தில் மலர்ச்சி போன்றவை.) சரியான நேரத்தில் பயனாளியின் உணர்ச்சி மாற்றங்களிற்கு ஏற்ப உங்களது உணர்ச்சி மாற்றங்களையும் வெளிக்காட்டலாம்.

**தட்டிக்கொடுத்தல் / ஊக்கப்படுத்தல்**

---

உங்களது பயனாளி தனது மிக அந்தரங்கமான இதுவரை மறைத்த இரகசியங்களை வெளிக்கொணர்வதற்கு ஊக்கப்படுத்தவும். அவ்வாறான நேரங்களில் அவரை நேர்முகமாக தட்டிக்கொடுத்து அந்த செயலிற்காக ஊக்கப்படுத்த, உற்சாகப்படுத்த மறக்க வேண்டாம். பயனாளியுடனான இடையீடுகள் இருக்கும் காலம் வரைக்கும் இவற்றை செய்வதற்கு பின்நிற்கவோ, தயங்கவோ, தட்டிக்கழிக்கவோ வேண்டாம்.

**மதிப்பீடு செய்தல்**

---

பொதுவாக பயனாளிகள் தங்களது தனிப்பட்ட விடயங்களை தெரியாதவர்களுடன் கதைப்பதற்கு கூச்சப்படுவார்கள். அவர்களும் தங்களை ஒத்த பாதிப்புடன் இருப்பவர்களும் இவ்வாறே இருப்பார்கள் என்பதை அறிவதில்லை. தங்களது பிரச்சினையை கதைப்பது என்பது அவர்களது பலவீனமோ? மனநோய்களின் அறிகுறியோ? என்ற உணர்வுகளும் அவர்களில் இருக்கலாம். சில பயனாளிகள் தாங்கள் உணர்வதை குறித்து தங்களிற்கு தாங்களே குற்றம் சுமத்தலாம். இவ்வாறான உண்மைக்கு புறம்பான நம்பிக்கைகள் பிழையானவை என்பதை நீங்கள் பயனாளிக்கு செய்யும் இடையீடுகளில் உணர்த்த வேண்டும்.

இதேபோன்றே ஏனைய பயனாளிகளும் உணர்ந்து கொள்வார்கள் என்பதை யதார்த்த பூர்வமாக ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும்.

இவ்வாறு செயற்படுவதன் ஊடாக உங்கள் பயனாளி உங்களில் மிகக் கூடிய நம்பிக்கையை காட்டிவளர்ப்பதுடன், இதன் மூலம் தொடர்ந்தும் அவருடனான பயனுடைய தொடர்பாடலிற்கும் உதவியாக அமையும். சிலவேளைகளில் சில பயனாளிகள் நாங்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளாத மனநிலையிலும் இருக்கக்கூடும் என்பதையும் தெரிந்திருத்தல் நன்று.

அரங்கம் செய்திகள்
அரங்கம் பத்திரிகை மட்டுநகரில் கிடைக்கும் இடம்
முகவர்களுக்கு
விளம்பரங்களுக்கு
இல : 227, பார் வீதி,
மட்டக்களப்பு.
arangamnews@gmail.com
071 399 9091
ARJUNA ADVERTISING
#19A, Baily Road, Arasady, Batticaloa.
Mob : 0777 222 489 / Tel&Fax : 065 222 6763 /mail: arjunaadds@gmail.com
EAST LINK AGENCY POST OFFICE
NO : 196, Trinco Road,
Batticaloa.

ஊழலை ஒழிப்போம்!
அதற்கு எதிராக குரல்கொடுப்போம்
தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற
TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity
நேர்மையின் புகலிடம்
இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு – 05
Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org
அழையுங்கள் 011 2 501 503
மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

MEGAM AGENCY
Import, Export Clearing Forwarding & Customs
Tel/Fax 2445383 Hotline (+94 77 773 2226)
megamagency@yahoo.com
உங்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விடயங்களை / சுங்கப் பணிகளை
திறம்படச் செய்து முடிக்க நாடுங்கள்..
#61,A.G HINNI APPUHAMY MW, COLOMBO -13



FCC SUPER MALL
4 Wings for Uplift Your life
ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.
PHARMACY
SUPER MARKET
BUDGET SHOP
CAFETERIA
உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...
இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு. TP: 0652222722, Hotline: 0772072722
Bundle Offer
Nestomalt - 400g -
Free- 40g Watawala Ceylon Tea
Lipton Ceylonta Tea -
Free- 500g 1 Kg Sugar
N - Joy Coonut oil 650 ml 5 can
Free- Jumbo Peanut 45g
Sun light 2Kg washing Powder
Free- Bucket
Maggi Develed 4 Pak
Free- lunch box
Dash Dishwash liquid 500ml
Free- Sponch Dishwash bar
Edinbrow Potato Crisps - 110g
Free- Edinbrow Tomato Source

